கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

3-8-1975

50 காசு




புதுமை
இந்தியாவில் இதுவே
முதல் முறை
கேம்லின் பேனா
தன்னுள்ளவே அமைந்த
பிஸ்டன் ஃபில்லிங் ஸிஸ்டம்
கைதேர்ந்த கரத்துக்குப் பொருத்தமான
கச்சிதமான பேனா. முத்தான எழுத்துக்கு
இதுவோர் சத்தான துணை.
உள்ளமைந்திருக்கும் ஒரு வியப்பூட்டும்
அமைப்பால் தெள்ளத் தெளிவான
மணிமணியான எழுத்துக்கள்
வடிவம் பெறுகின்றன.
வழக்கமாக கொள்ளும் அளவைவிட
இரட்டிப்பு அளவு மை நிரப்ப, இந்தத்
தனிப்பட்ட பிஸ்டன் ஃபில்லிங் ஸிஸ்டம்
வழி செய்வதால், நெடு நீண்ட நேரம் எழுதிக
கொண்டே இருக்கலாம்.
மை நிரப்பும் வேளையிலே
தருவதில்லை தொல்லை. கை எழுதும்
வேலையிலே தங்குதடை இல்லை!
கேம்லின் பேனாக்கள் மற்றும் பால்-பேனாக்கள்
மனதுக்கு இசைந்த எண்ணற்ற
நிறங்களில் கிடைக்கின்றன.
கேம்லின் பிரை. லி.,
ஸ்டேஷனரி டிவிஷன், பம்பாய்.
CAMLIN
camlin 47


கோகுலம்

மலர் 4 □ இதழ் 9

ஆகஸ்ட் 3, 1975

ராட்சஸ, ஆடி 18

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்



கோகுலம் அன்பர்களே!

நாட்டிலே ஒரு நெருக்கடி! இந்த வேளையில் நானும் உங்களுக்கு நெருக்கடியான ஒரு விஷயத்தைக் கூறப் போகிறேன்.

இன்றுள்ள நிலையில் இதே விலையில் கோகுலத்தை வெளியிட முடியாது. இதற்கு முன்பு விலை உயர்வுக்குக் கூறிய காரணங்களே இன்று விசுவரூபம் எடுத்து நிலைமை பல மடங்கு மோசமாகியுள்ளதே தவிர சரடையவில்லை. ஆகவே 17—8—75 இதழிலிருந்து கோகுலம் பிரதி ஒன்றின் விலையை அறுபது காசுகளாக உயர்த்துவதைத் தவிர வேறு வழியே இல்லை. வழக்கமான உங்கள் ஆதரவும் கோகுலத்துக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. விலையைப் போலவே விஷயச் சிறப்பிலும் உயர்ந்து வெளிவரப் போகிறது கோகுலம். 'கோகுலத்தை வாரப் பத்திரிகையாக்குங்கள்' என்ற உங்கள் வேண்டுகோளை ஏன் செயல்படுத்த முடியவில்லை என்று இப்போது புரிகிறதல்லவா? பத்திரிகைத் தயாரிப்புக்கான பொருள்கள் தாராளமாகவும் மலிவாகவும் கிடைக்கும்போது உங்கள் ஆசை பூர்த்தியாகலாம் என்று நம்புகிறோம்.

-ஆசிரியர்

புதிய சந்தா விகிதம்

இந்தியா		வெளிநாடுகள்	
ஒரு வருடம்	ரூ. 15.00	ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 7.50	ஆறு மாதம்	ரூ. 16.50

அடுத்த இதழில்

வாண்டுமாமா எழுதும்

மாய மோதிரம்

அற்புதத் தொடர்கதை ஆரம்பமாகிறது,

இன்னும் தங்கைகளுக்குத் தனிப்பகுதி

அறநெறி

9. நியாயந் தெரிந்தால் மகிழ்ச்சி நிச்சயம்

மனிதனுக்கு நியாயம் எது? அநியாயம் எது? என்ற தெளிவு தோன்ற வேண்டும். அவ்வாறு தெளிவு உண்டாகுமானால் அவன் நஷ்டத்திலும் மகிழ்ச்சியடைவான்.


இந்தத் தத்துவத்தை அடியில் கண்ட வரலாறு தெரிவிக்கின்றது.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ராமனும் சோமனும் தல யாத்திரைக்குப் புறப்பட்டார்கள். இப்போதுள்ள ரயில், பஸ் முதலிய சாதனங்கள் இல்லாத காலம் அது. நடந்தும் மாட்டு வண்டியிலும் பயணஞ் செய்து ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் முழுகி, புண்ணிய மூர்த்திகளைத் தரிசித்துக் கொண்டு தூய நினைவுடன் யாத்திரை செய்தார்கள்.

அந்தக் காலத்தில் என்ன விக்கிரயஞ் செய்தாலும் அன்ன விக்கிரயம் செய்ய மாட்டார்கள். அதனால் அவர்கள், கோதுமைமா, சத்துமா, அவல், உலர்ந்த திராட்சைப் பழம், தேனில் ஊற வைத்த பேரீச்சம் பழம் முதலிய உணவுப் பொருள்களைக் கூடைகளில் வைத்துக் கொண்டு யாத்திரை செய்தார்கள். பசி வந்தபோது அவைகளை உண்டு களைப்பாறினார்கள். யாத்திரை பூர்த்தியாகின்ற தருணம், கன்யாகுமரி சென்றார்கள். அது தான் கடைசித்தலம். நீலக் கடலின் எல்லையில், எல்லையில்லாத எழிலுடன் காட்சி தரும் அந்த உலகன்னையை, உள்ளம் உருகி வழி பட்டார்கள். ஒரு சத்திரத்தில் வந்து அவர்கள் கூடையில் மிஞ்சியிருந்த—கோதுமை மாவைக் கொண்டு, ராமன் ஐந்து ரொட்டி தட்டினான். சோமன் மூன்று ரொட்டி தட்டினான்.

அந்த நேரம் இரவு ஒன்பது மணியிருக்கும். அவ்வேளை அவ்விருவருக்கும் நெருங்கிய நண்பன் காமன் வந்தான். வந்தவனை இருவரும் அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றார்கள்.

வந்தவருக்கு உணவு தந்து உபசரிப்பது நம் நாட்டின் பண்பு. ராமன் சோமன் காமன் என்ற மூவர். இருப்பதோ எட்டு ரொட்டிகள். இவற்றை மூவரும் உண்ண வேண்டும். ராமன் அறிவாளி ஒவ்வொரு ரொட்டியை





திருமுருக கிருபானந்தவாரியார்

யும் நிலாப்பிறை போல் மூன்று துண்டுகளாகச் செய்தான். இப்போது எட்டு ரொட்டிகள் இருபத்திநான்கு துண்டுகள் ஆயின. ஆளுக்கு எட்டுத் துண்டுகள் உண்டு நீர் பருகிப் படுத்தார்கள்.

காமன் விடியற்காலை எழுந்தான். மேஜை மீது எட்டு ரூபாய்களை வைத்து விட்டுச் சென்றான்.

பின்னர் ராமனும் சோமனும் கண் விழித்துப் பார்த்தார்கள். காமன் இல்லை; மேஜை மீது எட்டு ரூபாய்கள் மட்டுமே இருந்தன.

ராமன், ''சோமா! ஐந்து ரொட்டிகள் என்னிடம் இருந்தன, மூன்று ரொட்டிகள் உன்னிடம் இருந்தன. இங்கே இருப்பவை எட்டு ரூபாய்கள். ஆகவே ஐந்து ரொட்டிக்கு நான் ஐந்து ரூபாய் எடுத்துக் கொள்ளுவேன். மூன்று ரொட்டிக்கு நீ மூன்று ரூபாய்கள் எடுத்துக் கொள்'' என்றான்.

சோமன் ''ராமா! நீ சொல்லுவது நியாயம் ஆகாது. கண்டதில் பாதியாகப் பகிர்ந்து கொள்வது தான் முறை. உனக்கு நான்கு ரூபாய்; எனக்கு நான்கு ரூபாய்'' என்றான். இருவரும் ஒரு ரூபாய்க்காக வாதிட்டுக் கொண்டார்கள்.

ராமன் எனக்கு ஐந்து ரூபாய்தான் சேர வேண்டும் என்றான். சோமன் எனக்கு நான்கு ரூபாய்தான் சேர வேண்டும் என்று சண்டையிட்டுக் கொண்டார்கள்.

அப்போது இருவருக்குந் தெரிந்தவரும், நியாயத்தை ஆராய்ந்தறிபவரும் ஆன வீமன் என்பவர் அங்கு வந்தார்.

இருவருடைய விவாதங்களையும் கேட்டறிந்தார். அந்த எட்டு ரூபாய்களை எடுத்தார். சிறிது சிந்தித்தார். ராமனிடம் ஏழு ரூபாய்களைத் தந்தார்; சோமனிடம் ஒரு ரூபாயைத் தந்தார். இப்போது ராமனுக்கு லாபம்; சோமனுக்கு நஷ்டம். வீமன் நல்ல திடகாத்திர தேகமும் விவேகமும் படைத்தவர். அவரிடம் பேசவே மற்றவர்களுக்குப் பயம்.

சோமன், ''இவர் எனக்கு மூன்று ரூபாய் தரஇசைந்தார். அதுபடி தாரும்'' என்றான்.

வீமன், ''அப்பா உன்னுடைய ரொட்டி மூன்று. அவை ஒன்பது துண்டுகள் ஆயின. நீ எட்டுத் துண்டுகளை உண்டு ஒரு துண்டுதான் காமனுக்குத் தந்தனை. ராமனுடைய ஐந்து ரொட்டிகள் பதினைந்து துண்டுகள் செய்யப்பட்டு, அதில் எட்டுத் துண்டுகளை அவன் உண்டு காமனுக்கு ஏழு துண்டுகள் தந்தான். ஏழு துண்டுகள் தந்தவனுக்கு ஏழு ரூபாய்; ஒரு துண்டு தந்தவனுக்கு ஒரு ரூபாய். இது தானே நியாயம்?'' என்றார். நியாயத்தை உணர்ந்த சோமன் ஒப்புக் கொண்டு மகிழ்ந்தான்.



இசையினால் ஏற்றிய

புதுக்கோட்டை மன்னரின் அரண்மனை. அரண்மனையங்கணத்தில் அழகாக அலங்காரம் செய்யப்பட்ட சங்கீத மண்டபம். புலவர்களும் பிரபுக்களும் அமைச்சர்களும் பொதுமக்களும் அங்கு நிரம்பி யிருந்தனர்.

திடீரென்று வாயிலில் அரசர் வருவதன் ஆரவாரம் கேட்டது. அதைக் கேட்டதும் சபை முழுவதும் எழுந்து நின்று உபசாரம் செலுத்தியது. தன் முக்கிய அமைச்சர்களுடன் அரசர் அவையினுள் புகுந்த உடன் ''மன்னர் வாழ்க'' என்ற கோஷம் வானைப் பிளந்தது. மன்னர் மெதுவாக நடந்து சென்று சிம்மாசனத்தில் அமர்ந்தார். மக்கள் மிகுந்த அமைதியாக இருந்தனர். அவர்கள் எதையோ எதிர்பார்ப்பது போல் காணப்பட்டது. ஆம், அன்று அதிசயமானதோர் போட்டி நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.


அரசர் தன் வலது கையை அசைத்த உடன் இரண்டு சேவகர்கள் சபை நடுவே அழகானதோர் குத்துவிளக்கைக் கொண்டு வந்து வைத்தார்கள். ஒருவன் பளபளக்கும் அவ்விளக்கில் இரண்டு திரிகளைப் போட்டான். இன்னொருவன் அதில் கவனமாக எண்ணெயும் வார்த்தான். இனி ஒரே வேலை அதை ஏற்றுவதுதான். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

சபையின் ஒரு பக்கத்தில் சங்கீத மேதைகள் வீற்றிருக்கும் வரிசையில் ஓர் இளைஞனைப் பார்த்து அரசர் சொன்னார்:

''தங்கள் இசைத் திறனைப் பற்றி நாங்கள் ரொம்பக் கேள்விப் பட்டிருக்கிறோம். இதோ பாருங்கள், சபை நடுவே ஒரு விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இசையினால் அதன் திரியில் தீமூட்ட உங்களால் முடியுமா?''

கேள்வி கேட்ட வினாடி எல்லோர் கவனமும் அந்த வாலிபர் மேல் விழுந்தது. மெல்லிய உடற்கட்டுடைய அந்த வாலிபனின் முகம் ஒளி மயமாக இருந்தது. கற்பூரத் தீபங்களைப்போல் ஒளி சிதறும் தன் கண்களை பக்கத்திலிருக்கும் தன் குரு வெங்கடரமணய்யாவின் பக்கம் திருப்பி அவர் அனுமதியைக் கேட்டார். ''சரி'' என்றவண்ணம் தலையசைத்தார் குரு.

குருவை வணங்கி ஆசி பெற்ற பின், அந்த இளைஞன் தன் கான ஆலாபனையைத் தொடங்கினார். மெதுவாக, மிக மெதுவாக விண்வெளிப் பரப்பில் உயர்ந்து பாடும் ஒரு வானம்பாடிப் பறவையுடையது போல் அந்த கானம் அங்கிருந்த அனைவரையும் கவர்ந்தது.



விளக்கு

-கே. பாலசந்திர நாயர்.

''ஜோதி ஸ்வரூபிணி'' என்ற ராகத்தைத்தான் அவன் அப்போது பாடிக் கொண்டிருந்தான்.

இசையின் தேவதையே இந்த வாலிபனின் உள்ளத்திலிருந்து பாடுகிறதா? என்று சந்தேகித்தனர் பலர். அவனது இசைக்கு இந்த விளக்கைக் கொளுத்தும் சக்தி உண்டா? முடியுமா முடியாதா...? முடியாமல் போகுமா? என்ற கேள்விகள் ஒவ்வொரு மனத்திலும் உயர்ந்தன. அப்போதும் அவன் முகம் ஒளி சிந்தும் தீபம் போல் ஜொலித்தது. விளக்கைச் சுற்றிப் பறக்கும் பூச்சிகளைப் போல் பார்ப்போர்களின் கண்களும் இதயங்களும் அந்த இளைஞனைச் சுற்றியே பறந்து வந்தன.

அரசர் உணர்ச்சி மேலிட்டினால் சிம்மாசனத்தில் முன் பக்கமாகச் சாய்ந்து தன்னையே மறந்து இருந்தார். இசையின் இனிமையைச் சொல்லுக்கு அடங்காத அளவுக்கு எல்லோரும் அனுபவிக்கத் தொடங்கினர். மிகச் சிலர் மட்டும் இடையிடையே என்னவோ தடைப்பட்டது போன்று வாலிபர் முகத்தையும் திரியிட்ட விளக்கையும் மாறி மாறிப் பார்த்தனர்.

''அதோ பாடுவது யார்? அந்த இளைஞன் எங்கே? அவனிருந்த இடத்திலே சாட்சாத் வாக்தேவதையல்லவா வீற்றிருக்கிறாள்? தேஜோரூபிணியில்லையா? அவள் பிரபாமயி யில்லையா?'' அந்தப் பரமானந்தத்துக்குள் மூழ்கிய உள்ளங்கள் பிரமித்துப் போயிருந்தன! ஜோதி ஸ்வரூபிணியின் சிலம்பொலி வர வர நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்த இளைஞன் அப்போதும் பாடிக் கொண்டிருந்தான். மெல்ல மெல்ல அவன் விழிகளிலிருந்து நீர் வடியத் தொடங்கியது. உள்ளமென்னும் கோயிலில் திறந்த அறைகளிலிருந்து ''தாயே! நீ எனக்காக இந்தத் தீபத்தை ஏற்ற மாட்டாயா?'' என்று உருக்கமான கேள்வி உயர்ந்து கொண்டிருந்தது. கண்ணீர் மணிகள் அவன் சிவந்த மார்பில் உதிர்ந்து உருண்டன.


அதோ, அந்த அதிசயம் நடந்துவிட்டது. சபா மத்தியிலிருந்த குத்துவிளக்கு ஒளி சொரியத் தொடங்கி விட்டது. அதிலிருந்த திரிகள் தாமாகவே தீப் பற்றிக் கொண்டன.

பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப் பேசவே முடியவில்லை. தங்கள் கண்களையே நம்ப முடியாத நிலையிலும் உள்ளங்கள் கூவின. ''ஆமாம், அது உண்மைதான்! அது உண்மைதான்!''

அந்த இளைஞன் இன்னமும் தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்தான். பார்வையாளர்களின் ஆனந்தத்தையும் அதிசயத்தையும் அவன் கவனித்ததாகத் தோன்றவில்லை. அவனது இசைக்கு ஏற்றபடி தீபச் சுடர்கள் ஆடிக்கொண்டிருந்தன.

போட்டி முடிவடைந்தது. அரசர் சிம்மாசனத்திலிருந்து இறங்கிச்சென்று அந்த இசைச் சக்கரவர்த்தியை வணங்கினார். அங்கு திரண்டிருந்த மக்கள் அனைவரும் அப்படியே செய்தனர். ஆனால் அந்த இளம் கலைஞனோ சற்றும் கர்வம் கொண்டதாகக் காணப்படவில்லை. தான் திறமைசாலி என்று பாவித்துக் கொள்ளவுமில்லை. அரசரையும் தன் குருவையும் வணங்கி அவன் சொன்னான்: ''நான் ஒரு கருவி மட்டுமே. இதில் நாதம் பகர்ந்தது கடவுள் தான். அதனால் இந்தப் புகழ்ச்சியும் பரிசுமெல்லாம் அவரையே சேரும்.''

இந்த இளைஞர்தான் பிற்காலத்தில் ''தியாகராஜ சுவாமிகள்'' என்ற பேரில் புகழ் பெற்ற மகாபுருஷர். எளிதில் அடையலாம் என்றிருந்த போதும் பொருளோ மற்ற உலக இன்பங்களோ ஒருபோதும் அவரைக் கவர்ந்ததில்லை. தம் ஆசைகளை நிறைவேற்ற அரசர்கள் பலர் காத்திருந்தபோதும், அவர் தம் உள்ளத்திலும் வெளி உலகிலும் கடவுளைத் தரிசித்துப் பாடிப் பாடியே திருப்தி அடைந்தார்.



விளையாட்டில் விருப்பமா?

குதிரை ஏற்றம் ஆடுவோம்
குனிந்து நீயும் நில்லடா
முதுகில் கையை ஊன்றியே
முயன்று நானும் தாண்டுவேன்!


நொண்டி ஆட்டம் ஆடுவோம்
நோக்கி வாடா கப்பையா
ஒண்டிக் காலால் மட்டுமே
ஓடிவந்து பிடியடா

பந்து ஆட்டம் ஆடுவோம்
பார்! எதிரில் நில்லடா
இந்தப் பந்தைப் பிடியடா
எனக்குத் திருப்பி வீசடா!

—நடேச நாராயணன்



நீலக்கடலே!



நீலக் கடலே! ஒருகேள்வி;
நெடுநா ளாகச் சந்தேகம்!

ஊரில் உள்ள நீரெல்லாம்
உன்போல் இல்லை; ஆனாலும்
யாரும் மையைக் கொட்டினரோ?
எப்படி நீலம் ஆனாய்நீ?

நீலக் கடலே, உன்செல்வம்
நினைக்கப் பெருமை யாகிறது!

மடியில் எத்தனை கப்பல்கள்;
மட்டில் லாத படகுகளாம்;
அடியில் முத்து, பவழங்கள்!
அப்பப்பா, நீ பணக்காரன்!

நீலக் கடலே உனக்குத்தான்
நெஞ்சில் கருணை ஏராளம்!

ஆறுகள் எத்தனை வந்தாலும்
அனைத்தும் ஏற்றுக் கொள்கின்றாய்;
வேறு படுத்துவ தில்லை,உன்
வீடும் அத்தனை பெரிதாமே!

நீலக் கடலே உன்மீது
நீங்கா வருத்தம் ஒன்றுண்டு!

எல்லை யின்றி நீரங்கே
எவ்வள வாக இருந்தென்ன?
அள்ளிக் குடிக்க வழியில்லை;
அய்யே! கரிக்குது உப்பங்கே!

— துரை சீனிவாசன்

தாமரையும் வண்டும்



நித்த மொரு தாமரை
நீரின் மேலே பூக்குதாம்!
அத்தைக் கண்ட வண்டுகள்
அருகே ஓடி வருகுதாம்.

மலரும் வண்டை நோக்கியே
மணம் பரப்பி நிற்குதாம்
மதுவை யுண்ட வண்டுகள்
மயங்கி அங்கே விழுகுதாம்

கதிர வனும் மறைகிறான்
காலைப் பொழுதும் முடியுதாம்
எதிரில் மாலை வந்ததும்
இதழும் மூடிக் கொள்ளுதாம்!

மொட்டைக் கண்ட தென்றலும்
முட்டி மோதி அலையுதாம்
மொட்டுக் குள்ளே வண்டுகள்
முனகிக் கொண்டே விழித்ததாம்

மலரும் மூடி இருந்ததால்
மனமு டைந்த வண்டுகள்
இறகை வீசி ஆட்டியும்
எதுவும் செய்ய முடியல்லே!

மெத்த உண்ண எண்ணுவோன்
செத்து மடிவ துண்மையே!
இத்தை உணர்ந்து நண்பரே
இன்ப மாக வாழுவீர்!

– சேது நடராசன்

அன்னையின் அதிர்ச்சி!



சின்னக் குழந்தையாம் கண்ணன் ஒருநாள்
சேர்தோளிர் தண்டை ஒலித்திடவே
தன்னரும் அன்னை யசோதையிடம் வந்து
தங்கக் கிண்ணமதில் "பால்கொடெ" ன்றான்.

"மாலைநேரம் இன்னும் ஆகவில்லை கண்ணா!
மாடுகள் வீடு வரவில்லையே!
பாலைக் கறந்து தேன் பாகோடு சேர்த்துப்
பருகிட லாம்இன் றிரவில்" என்றாள்.

முத்து மணியைப் பிடித்திழுத்தே கண்ணன்
முகஞ் சுளித்தே இதைக் கூறிடுவான்
"எத்தனை நாழிகை காத்திருக்க வேண்டும்
இரவு வருவது எப்போ தம்மா?"

"ஆ தவன் மறைந்து போனவுடன் எங்கும்
அடையிருள் சூழ்ந்திடும் போதே" னவே
மாதவ அன்னை பொறுமையுடன் கூற
மலர் விழிக் கண்களை மூடிக் கொண்டே

"ஆதவன் சென்று மறைந்து விட்டா னம்மா!
அடையிருளும் வந்து சூழ்ந்த" தென்று
மாதவன் கூறியே பால் கொடென்றான் அன்னை
மட்டில் வியப்பால் அதிர்ந்து நின்றாள்!

– எஸ். லலிதா

போஸ்ட் கார்டு போட்டி

முடிவுகள்

எங்கள் ஊர்

(இந்தத் தலைப்புக்கான பரிசை இருவர் பங்கிட்டுக் கொள்கின்றனர்.)

பழநியை நினைவுகூரும் வகையில் சென்னையில் வடபழநி அமைந்துள்ளது போல், சோழ மன்னனின் வெற்றியின் நினைவாக அமைந்ததைப் போன்று தோற்றம் உள்ள எங்கள் ஊரில் கோயில் உண்டு; கோபுரமில்லை. தெப்பக் குளம் உண்டு; தண்ணீர் கிடையாது. ஊராட்சி மன்ற மருத்துவர் உண்டு. ஆனால் மருத்துவ வசதி கிடையாது. சிற்றாறு ஓடுகிறது. ஆனால் நீர் இல்லை. ரயில் வசதி உண்டு; ஆனால் மக்கள் அங்கு போய் ஏறுவது கிடையாது. (இரண்டு மைல் தூரம்) ரவை, மைதா மில் உண்டு; ஆனால் நாங்கள் வாங்க முடியாது. இத்தனை வசதியோடு உயர்நிலைப் பள்ளி, காவல் நிலையம், துணைப் பதிவாளர் அலுவலகம், விவசாய அலுவலகம், கூட்டுறவு நில அடமான சங்கத்தோடு பல அலுவலகங்கள் உள்ளன. கால் நடை மருத்துவர் உண்டு; ஆனால் மருந்து கிடையாது. நூலகம் உண்டு; ஆனால் பத்திரிகை வசதி கிடையாது. ஆலமரம், அரச மரம் உண்டு; ஆனால் அடியில் பிள்ளையார் இல்லை. (திருடு போய் விட்டது). கொடிகள் பறக்கும், கூட்டங்கள் கிடையாது. டவுன் பஸ், பள்ளி, காவல் நிலையம், தபால் நிலையம், ஆறு, ஊராட்சி மன்றம், அலுவலகங்கள் அனைத்தும் அரை கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்த அழகிய சிற்றூர் எங்கள் ஊராகும். பெயர் - கங்கை கொண்டான்.

கே. எம். குருநாதன், திருநெல்வேலி
வயது - பதினைந்து



எங்கள் ஊரான மேட்டுப் பாளையம் பெயருக்கேற்றவாறு மேடும் பள்ளமுமாகப் பவானி ஆற்றங் கரையில் அமைந்துள்ளது. மிக அருகில் நீலகிரி மலைகள் அமைந்த ரம்யமான சூழ்நிலை. சுற்றிலும் பாக்குத் தோப்பு 'சோ' என்று இருக்கும். ஆங்காங்கே மனத்தைக் கொள்ளை கொள்ளும் கோயில்கள்; முருகனுக்கு, பத்ரகாளி அம்மனுக்கு, மாதொரு பாகனை சிவனுக்கு, மற்றும் பல அம்மன் கோயில்கள். எல்லாம் அளவில் சிறியவை. ஆனால் 'கோவில்' என்று வார்த்தை ஏன் ஏற்பட்டதோ அந்தப் பெருங் காரணத்தைப் பூர்த்தி பண்ணுபவை. நீங்கள்தான் நேரில் வந்து பாருங்களேன். என் எண்ணத்தை வார்த்தைகளால் எனக்குச் சொல்ல முடியவில்லை. ஆற்றுப் பாய்ச்சல் உள்ள விஸ்தீரணமான வயல்களை உடைய நிலப் பெருங்கிழார்கள் மற்றும் நவீன பாணி தொழிற்சாலைகள் (செயற்கை வைரம்—செயற்கைப் பட்டு, தோல் பதனிடும் சாரம் மற்றும் பல.) திரளாகப் பலர் நிறைந்திருப்பினும் ஊர்ப் பொதுக் காரியங்களைக் கவனிக்க யாரும் இல்லை. ஒரு நல்ல பார்க் அமைய பல இயற்கை வசதிகள் இருந்தும் யாரும் அது குறித்து நினைப்பதில்லை. சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கும். சாக்கடை நீர் ஓடாது தேங்கியிருக்கும். பள்ளிக்கு நல்ல கட்டடமில்லை. இத்தனை குறைகளுடனும் இது எங்கள் ஊர், எங்கள் உயிருக்கு உயிரான ஊர்.

எஸ். காவேரி, மேட்டுப்பாளையம்
வயது - பதினாறு

நான் படித்த நல்ல புத்தகம்

(இந்தத் தலைப்புக்கான பரிசை ஐவர் பிரித்துக் கொள்ளுகின்றனர்.)

"அறிஞர் பெர்னார்டு ஷாவின் வாழ்க்கை வரலாற்றைப் பெரியவர்களும், சிறியவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் எழுதியுள்ளார். 'ஷா கல்விக்கு வழியற்ற சிறுவனாய் வளர்ந்தார். தானாகவே, அவர் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டார். பாராளு மன்றத்தில் தொண்டு செய்வதைவிட வெளியே இருந்து நிறையத் தொண்டு செய்யலாம் என்று நம்பினார். ஷாவிடம் செருக்குண்டு என்றாலும் நேர்மையும், உண்மையும் உடையவர். ஷா ஆடம்பரத்தை வெறுத்தார். ஷாவின் தன்னம்பிக்கையும், தன் முயற்சியும் முன்னேறும் மாணவர்களுக்கு ஒரு படிப்பினை ஆகும்.

புத்தகம்: அறிஞர் பெர்னார்ட் ஷா
ஆசிரியர்: டாக்டர் மு. வரதராசன்

வீர. சேவுகன், தேந்நன்பட்டி
வயது - பன்னிரண்டு

நான் படித்த நல்ல புததகம் ஆங்கில நாவலாசிரியரான பெர்னார்டு ஷா எழுதிய "மருத்துவர்களின் குழப்பம்" என்னும் நூலாகும். (*Doctor's Dilemma*) இதில் அவர் மருத்துவர்களின் குறைகளை அம்பலப்படுத்தியுள்ளார். அரசாங்கத்தால் விருது கொடுத்து மரியாதை செய்யப்படும் ஒரு மருத்துவர் செய்யும் கோமாளித்தனங்களை அவர் அழகாக இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். நாலு மருத்துவர்கள் சேர்ந்து ஒரு பெண்ணின் கணவனைக் காப்பாற்றுவதற்குப் பதில் அவனை இறக்க விடுவதையும் உணர்ச்சியோடு எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் அவர் தம் நூலின் முன்னுரையில் இந்நாள் மருத்துவர்களின் சிகிச்சை முறை முற்காலத்தைவிட எந்த வகையிலும் முன்னேறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் மூலம் பெர்னார்ட் ஷா என் உள்ளம் கவர்ந்த எழுத்தாளராகிறார்.

இ. வி. இராகவன், சென்னை-88
வயது - பதினொன்று







சமீபத்தில் நான் படித்த 'பண்பும் பதவியும்' என்ற புத்தகம் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. இந்நூலின் ஆசிரியர் பெயர்: பி. க. வேணு கோபாலப்பிள்ளை. இந்தப் புத்தகத்தில் அரியநாதர் என்பவரையும், புக்கர் வாஷிங்டன் என்பவரைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். அரியநாதரும், புக்கர் வாஷிங்டனும் தமது பண்பினால் முன்னுக்கு வந்தவர்கள்.

அரியநாதர் ஓர் ஏழைமைக் குடியில் பிறந்து தமது அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் சிரிய பண்பினாலும் முன்னுக்கு வந்தவர். புக்கர் வாஷிங்டன் ஓர் ஏழை நீக்ரோ குடியில் பிறந்து தமது அறிவினாலும், அயரா உழைப்பினாலும் பண்பினாலும் முன்னுக்கு வந்தார். ஒரு மனிதனுக்குப் பண்பு மிக மிக அவசியம் என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார் ஆசிரியர். ஆகவே இந்த நல்ல புஸ்தகம் என்னைக் கவர்ந்ததில் வியப்பில்லையே!

எஸ். சொர்ணலதா, கோவை-2
வயது - பதின்மூன்று

வரலாறு காணாத ஒரு மாபெரும் போரை ஏற்படுத்திய பெருமை இப்புத்தகத்துக்கு உண்டு. '*Uncle Toms Cabin*' இந்நூல் அமெரிக்க அடிமைகளின் அவலத் தனத்தை அழகுபட உரைக்கின்றது: டாம் என்ற அடிமையின் துன்ப வாழ்க்கையை நெஞ்சுருக இயம்புகின்றது. பகலெல்லாம் பாடுபட்டு உழைத்த அடிமைகள் இரவில் கைகால்களில் சங்கிலியுடன் மாட்டுத் தொழுவத்தில் அடைக்கப்படுவதும், மாட்டை வாங்குவது போன்று பற்களை எண்ணி நீக்ரோ அடிமைகளை

வாங்குவது, ஒரு குடும்பத்தில் தந்தை ஓரிடத்து லும்; தாய் ஓரிடத்திலும், பிள்ளை ஓரிடத்திலும் விற்கப்படுவது போன்ற சமுதாயக் கொடுமைகளை அழகாக எடுத்தியம்பும் இந்நூலின் ஆசிரியர் அடிமைகளின் விடுதலைக்காக உரிமைக் குரல் கொடுக்கிறார். அவரே தமது நூலை 'அமைதித் தூதுவர்' எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஒரு குறையும் இல்லாத இந்த நல்ல புத்தகத்தை நான் பெரிதும் விரும்புகிறேன்.

க. அசோகன், சென்னை-20
வயது - பன்னிரெண்டு

நான் இந்த விடுமுறையில் **திருமுருக கிருபானந்தவாரியார்** எழுதிய **'கட்டுரைக் கனிகள்'** என்ற புத்தகத்தைப் படித்தேன். வாரியார் தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களைச் சொல் லழகோடு, அழகிய உவமைகளுடன் கூறுவதில் வல்லவர். மருத்துவர் மருந்துகளைச் சர்க்கரை இனிப்புடன் சேர்த்துத் தருவதுபோல அறிவுரை களைக் கதைகளில் வைத்துச் சொல்வதில் சமர்த் தர். அவரது எழுத்துக்களில் உயர்ந்த நகைச் சுவையும் கலந்திருக்கும். இந்நூலில் இறைவன் இயல்பினை நாம் தினமும் பயன்படுத்துகிற டயர், ட்யூப்களை வைத்து எவ்வளவு நயமாக விளக்கி விடுகிறார். ஞானிகள் அனைவரையும் ஒன்றாக நோக்குபவர் என்பதை அழகிய இரு உவமைகளால் விளக்குகிறார் 'சமரசம்' என்ற கட்டுரையில். 'இடுக்கண் வருங்கால் நகுக' என் பதை 'நகுக' என்ற கட்டுரையில் எடுத்துரைக் கின்றார். பணத்தை 'ஆட்கொல்லி' என்கிறார். ஓடும், செம்பொன்னும் ஒக்க நோக்கும் உயர்ந்த மனப்பாங்கு இதில் தெளிவாகிறது. இரண்டு நண்பர்கள், இரண்டு சகோதரர்கள் என இரண் டிரண்டாக அடுக்கித் தலைப்பிலேயே அழகு நடம்புரியச் செய்கிறார். இது போன்ற உயர்ந்த நூல்களைப் படிப்பதால் பொழுது நல்லபடியாகப் போவதோடு, அறிவும் வளருமன்றோ?

ந. நடராஜசுந்தரம், திருவாரூர்
வயது - பன்னிரண்டு







அதிசயம் ஆனால் உண்மை

(இந்தத் தலைப்புக்கு வந்த கடிதங்களில் பரிசுத் தொகையை ஐந்து பேர் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர்.)

இது நடைபெற்ற சம்பவம். ஒருநாள் மாடி யில் காற்றுக்காகப் படுத்திருந்தோம். நல்ல தூக்கம். யாரோ என் அப்பாவைப் பெயர் சொல்லி மூன்று முறை அழைக்க என் அப்பா எழுந்து கீழே பார்த்துவிட்டு சுந்தர் வந்திருக் கிறார் என்று சொல்லிவிட்டுச் சாவியை எடுத்துக் கொண்டு கீழே சென்றார். சுந்தர் என் தந்தை யின் உயிர் நண்பர். அவருக்குப் பின்னாலேயே என் அம்மாவும் எழுந்து சென்றார்கள். சுந்தர் மாமா வந்தால் எப்பவும் தின்பண்டங்கள் நிறைய வாங்கி வருவார். எனவே நானும் அம்மாவின் பின்னே சென்றேன். கீழே என் அப்பாவும் அம்மாவும் குரல் கொடுத்த சுந்தரத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதற்குள் அவர் எங்கே போனாரென்பது கேள்வி. ஒரு மணி நேரம் வரை லைட்டையும் போட்டுக் கொண்டு உட்கார்ந்து இருந்தோம். அவரை எங்கேயும் காணவில்லை. சற்று நேரத்தில் கையில் லாந்தருடன் தந்திச் சேவகர் வந்து ஒரு தந்தியை என் தந்தையிடம் கொடுத்தார். அதில் 'சுந்தர் விபத்தில் கால மானார்-பெங்களூரில்' என்று இருந்தது. அப்படி யானால் சற்று முன் என் பெயர் சொல்லி அழைத்த சுந்தர் யார் என்று அப்பா திகைக்க அவர் இறந்த அதே நேரத்தில் இங்கு எப்படித் தோன்றியிருக்க முடியும் என்பதும் இன்னும் நம்ப முடியாத ஆனால் உண்மை நிகழ்ச்சியாக இருக்கிறது.

எஸ். பாபி. கபிலா தேவி
ஐந்தாம் வகுப்பு, மே. கடையநல்லூர்

என் தாத்தா ஸ்ரீராமனிடத்தில் மிகவும் பக்தி கொண்டவர். சதா இராம நாமம் சொல்பவர். அவர் ஒருமுறை ஒரு மலைமீது ஏறிக் கொண்டிருக்கும்போது பாதி வழியில் மலைக் கள்ளன் ஒருவன் என் தாத்தாவை வழிமறித்து, ''ஓய், பெரியவரே! மரியாதையாக உம்மிட

முள்ள மோதிரத்தையும் கைக் காப்பையும் கழற்றித் தாரும்'' என்று மிரட்டினன். என் தாத்தா ஒன்றும் பேசாமல் இராம ஜபம் செய்துகொண்டிருந்தார். அப்போது எங்கிருந்தோ ஒரு குரங்கு துரத்தியது. இது உண்மையாக ஸ்ரீ இராம தாதனை ஜெய் ஹனுமான் என்றே இன்றும் என் தாத்தா கூறுகிருர். இது உண்மையாகவே நடைபெற்ற ஒன்று. 'டுப்' அல்ல.

ர. கணேசன், சென்னை-4
வயது பதினைந்து, பத்தாம் வகுப்பு

அன்று வெள்ளிக்கிழமை. நாங்கள் மாலை பெரிய கோவிலுக்குப் போவதற்கு இருந்தோம். எங்கள் வீட்டில் அன்று மாலை நல்ல பாம்பு ஒன்று வந்தது. நாங்கள் அதை அடிப்பதற்கு எவ்வளவு தேடிப் பார்த்தும் அது அகப்படவில்லை. நாங்கள் கதவைப் பூட்டிவிட்டுக் கோவிலுக்குச் சென்றுவிட்டோம். நாங்கள் திரும்பி வருகையில் ஓர் அதிசயம் எங்கள் வீட்டில் நிகழ்ந்திருந்தது. கதவைத் திறந்து நாங்கள் உள்ளே நுழைகையில் ஒருவன் காலைப் பிடித்துக் கொண்டு வாயில் நுரை தள்ள, பேச முடியாமல் துடித்துக்கொண்டிருந்தான். உடனே அவனை ரிக்ஷாவில் வைத்து அருகில் இருந்த ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ருேம். பிறகு ஒரு மணி நேரம் கழித்து அவன் கண் திறந்து பேசினன். பிறகு அவனிடம் எல்லா விவரத்தையும் கேட்டோம். அதற்கு அவன் எங்கள் வீட்டில் திருட வந்தபோது நாங்கள் பிள்ளையார் மீது போட்டிருந்த முத்து மாலை அவனைக் கவர்ந்ததாகவும் அந்த முத்து மாலையை எடுக்கும்போது காலில் பாம்பு கடித்துவிட்டதாகவும் கூறினன். அந்த முத்து மாலை எங்களுடைய பரம்பரைச் சொத்து. அதனல் அதைச் சாமியின் மேல் போட்டிருந்தோம். பிறகு ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்தோம் நாங்கள் வீட்டுக்குள் நுழைந்தபோது உள்ளேயிருந்து பாம்பு வாசல் வழியே சென்றுவிட்டது. நாங்கள் கடவுளின் கருணையைக் கண்டு மெய் சிலிர்த்தோம்.

என். மணிகண்டன், கூறைநாடு
வயது பத்து, வகுப்பு ஐந்து







என் நண்பரின் உறவினர் ஒருவர் டில்லியில் பாதுகாப்பு அமைச்சரகத்தில் வேலை பார்த்து வந்தார். அப்பொழுது அவர் மனைவி நிறைமாத கர்ப்பிணி. உடல்நிலை மிகவும் சிக்கலாகி இர்வின் ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டில் அநுமதிக்கப்பட்டிருந்தாள். அப்பொழுது அவள் கணவர் அவசர வேலையாக சண்டிகர் போயிருந்தார்.. மனைவியின் நிலையை அவருக்குத் தெரிவிக்க முடியவில்லை. ஆனல் அவள் கணவர் சண்டிகரில் உள்ள ஓர் அலுவலகத்தில் ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது ஆபீஸ் சௌகிதார் அவருடைய மனைவி தேடிக்கொண்டு வந்திருப்பதாக அவரிடம் தெரிவித்தான். அவருக்கு ஒரே ஆச்சரியம். நடக்கக்கூட முடியாமல் இர்வின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் மனைவி இங்கே எப்படித் தன்னைத் தேடி வர முடியும்? ஆனல் அவர் உடனே மனைவியைச் சந்தித்தார். அவர் மனைவி தன் நகைகள், மற்றும் தாய் வீட்டுச் சொத்தில் தனக்குள்ள பங்கு பத்திர சம்பந்தமான விவரங்கள் அனைத்தையும் மெதுவான குரலில் அவரிடம் தெரிவித்தாளாம். பிறகு நான் வருகிறேன் என்று கூறிவிட்டு வேகமாக அறையைக் கடந்து போய்விட்டாளாம். கணவர் வேகமாகப் பின்தொடர்ந்து சென்ருர். ஆனல் அவர் மனைவி எங்கும் தென்படவில்லை. அதற்குச் பிறகு சற்று நேரத்தில் அவர் மனைவி ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டதாகத் தந்தி வந்ததால், சற்று முன்பு அவரிடம் பேசியது அவர் மனைவியின் ஆவி தான் என்பதை நம்ப முடிகிறதா?

டி. எஸ். ஸ்ரீதர், மதுரை-1
வயது பதினறு, பதினென்றும் வகுப்பு

எங்கள் பேட்டையில் மொட்டையம்மன் ஜாத்திரை என்ற திருவிழா நடக்கும். இந்த நிகழ்ச்சி சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. திருவிழாவில் பந்தலுக்கு அருகில் நின்றிருந்த யானை, வெடிச் சத்தத்தால் பயந்து மிரண்டு கூட்டத்தில் பாய்ந்தது. எல்லோரும் அருகில் இருந்த


வீடுகளில் புகுந்தனர். ஒரே ஒரு குழந்தை மட்டும் கீழே கிடந்தது. அக்குழந்தை யானையின் நான்கு கால்களுக்கிடையில் - யானை சிறிது நகர்ந்தாலும் குழந்தை நசுங்கிவிடும்படியான நிலையில் கிடந்தது. எல்லோரும் குழந்தை அதோ கதிதான் என்று எண்ணிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கும் வேளையில், குழந்தையின் தாய் அம்மன் முன்னால் சென்று, "அம்மா தாயே! நான் கிறிஸ்துவக் குடியில் பிறந்தாலும் உன்னைத் தவறாமல் வணங்குகிறேன். எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடைய நான் பெற்ற குழந்தைக்கா இந்தக் கதி?" என்ற நெஞ்சுருகும் வார்த்தைகளைக் கண்ணீர் உகுத்தபடியே கூறினாள். திடீரென்று யானை பிளிறிற்று. மெதுவாகக் குழந்தையை மிதிக்கா வண்ணம் நகர்ந்து அப்பால் சென்றது. குழந்தை உயிர் தப்பியது.


B. ஜெகநீசன், சென்னை-12
வயது பதினான்கு, பதினொன்றும் வகுப்பு

எழுத்தறியும் பெருமாள்

(கடவுளின் கதைக்குப் பரிசு பெறத் தகுதியான கதைகள் எதும் வரவில்லை. ஆனால் ஏராளமாக வந்துள்ளவைகளில் ரசமான ஸ்தல புராணங்கள் பல உள்ளன. ஆகவே பிரசுரமாகும் ஒவ்வொரு கடிதத்துக்கும் பரிசு இல்லாவிடினும் உரிய சன்மானம் வழங்கப்படும். --ஆர்.)

திரு ஒற்றியூர் பெருமானுக்கு "எழுத்தறியும் பெருமாள்" எனவும் பெயர். அயோத்தி மன்னன் மாந்தாதா சிவ விஷ்ணு பேதமின்றி தருமம் பல செய்தவன். சமயம் பார்த்திருந்த சிவ வஞ்சகர்கள், அரசன் வயோதிக காலத்தில் மூப்பினால் துன்புற்றபோது அவன் செய்த சிவ தருமங்களைக் குறைத்தால் துன்பம் குறையும் என்று துர்போதனை செய்தனர். அரசன் கணக்கனை அழைத்துத் தான் செய்த சிவ தருமங்களைக் குறைத்து எழுதச் செய்தான். ஆனால் ஏடு வரி பிளந்து "திருவொற்றியூர் நீங்கலாக" எனத் திருத்தியிருப்பது கண்ட மன்னன் கணக்கனைக் கடிந்தார். கணக்கனும் தான் திருத்தவில்லை என்று இரந்து கூறினான். மன்னன் மறு ஏடு









எழுதச் செய்து அதைத் தன் வசம் வைத்துக் கொண்டான். ஆயினும் மறு தினம் பார்க்கும் பொழுது ஏடு மறுபடியும் வரி பிளந்து எழுதப்பட்டிருந்தது. இது இறைவனின் திருவிளையாடல் என அறிந்து மன்னன் ஒற்றியூர் வந்து "எழுத்தறியும் பெருமானே" என்று வணங்கி, பூஜித்து இழந்த இளமையை மீண்டும் பெற்று பல கோடி தருமங்கள் செய்து இன்புற்று வாழ்ந்தான். இது திருவொற்றியூர் தலபுராணம்.

கே. ஸ்ரீனிவாசன், சென்னை-5
வயது பதின்மூன்று, எட்டாம் வகுப்பு

குடுமிநாதர்

கோவிலுக்கு அரசர் வருவதாகத் திடீரென்று செய்தி வந்தது. குருக்களுக்கு ஒரே பரபரப்பு. ஸ்வாமியை அலங்கரிக்கப் புஷ்பம் இல்லை. அந்த ஊரில் உள்ள தாசியின் வீட்டுக்குச் சென்று புஷ்பம் கேட்டார். அவள் தான் சூடிய பூவை எடுத்துக் கொடுத்தாள். அதை அறியாத குருக்கள் அதைக் கொண்டு ஸ்வாமியை அலங்கரித்தார்.

மன்னர் வந்து தரிசனம் செய்ததும் ஸ்வாமி மேலிருந்த புஷ்பத்தைப் பிரசாதமாக எடுத்துக் கொடுத்தார் குருக்கள்.

அதில் ஒரு தலைமுடி இருப்பது கண்டு மன்னர் சந்தேகித்துக் கேட்டார். குருக்கள், "இது ஆண்டவனின் தலை முடியேதான்" என்றார்.

மன்னர் கடவுளின் அருகில் சென்று பார்க்க விரும்பினர்.

குருக்கள் கடவுளை மனதுக்குள் வேண்டினார்.

இருவரும் அருகில் சென்று பார்த்தபோது, என்ன ஆச்சரியம்! கடவுள் தலையில் முடி நிறைந்து காணப்பட்டது. குருக்களின் பக்தியைக் கண்டு மன்னர் வியந்தார். அன்றுமுதல் கடவுள் தலையில் குடுமி இருப்பதால் அந்த ஸ்வாமிக்கு "குடுமி நாதர்" என்று பெயர் ஏற்பட்டது. அந்த ஊரின் பெயர் குடுமியா மலை. அது எங்கள் புதுக்கோட்டையைச் சேர்ந்தது.

ஆர். புவனேஸ்வரி, புதுக்கோட்டை
வயது பதினான்கு, பத்தாம் வகுப்பு



ராட்சத மிருகங்கள்-9


கடலில் வாழ்ந்த ராட்சத ரெப்டைல்கள்

○ கிருஷ்ணவேணி ○

ரெப்டைல் எனப்படும் ஊர்வன வெல்லாம் ஆதியில் நிலத்திலேயேதான் வாழ்ந்தன என்று கூறமுடியாது. சில ராட்சத ரெப்டைல்கள் கடலிலும் ஆகாயத்திலும்கூட வாழ்ந்து வந்தன. கடலில் வாழ்ந்த ராட்சத ரெப்டைல்களில் முக்கியமானது **ப்ளீஸியோஸாரஸ்.** *(Plesiosaurs)* இது பூமியில் வாழ்ந்த ஆதி ரெப்டைல்களின் வழித்தோன்றல் தான். ஆனால் பார்வைக்குத் தரையில் வாழும் பிராணியைப் போலத் தோற்றமளிக்கவில்லை. தாவரங்களை உண்ணும் மிகப் பெரிய டினோசார்களிலிருந்தும் முற்றும் மாறுபட்டிருந்தது. பெரும் பொழுதை நீர்த் தேக்கங்களிலேயே கழித்தன இந்த ப்ளீஸியோஸாரஸ்கள்.

இவற்றின் உடல் தட்டையாகவும், கால்கள் எனப்படுபவை துடுப்புக்களைப் போலவுமிருந்தன. கழுத்தோ நீண்டும் மெலிந்தும் காணப்பட்டது. குட்டையான கெட்டியான வால். வாய் முழுதும் ஏராளமான கூரிய பற்கள். பார்த்த உடனேயே இது மாமிச பட்சிணி என்று கூறிவிடலாம். இவைகளில் மிகப் பெரியவை ஐம்பதடி நீளமிருந்தன. சிலவற்றுக்கு மிக மிக நீளமான தலை இருந்தது. மூன்று கஜ நீளமுள்ள ஒரு வகை ப்ளீஸியோஸாரஸின் மண்டை ஓடு ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ப்ளீஸியோஸாரஸ்கள் கடலில் வாழ்ந்தாலும் நிலத்தில் வாழ்ந்த தங்கள் மூதாதையரின் ஒரு குணத்தை மட்டும் இவைகடைப்பிடித்து வந்தன. அதாவது தங்கள் முட்டைகளை இவை நிலத்துக்கு வந்தே இட்டன. முட்டையிலிருந்து வெளிப்பட்டதும் குஞ்சுகள் நீண்ட கழுத்துக்களோடு நீர்நிலைகளை நோக்கிச் சென்றன. பார்வைக்கு பாம்புக் குட்டிகளைப்போல் இருந்தாலும் இவை பாம்புகளைப் போல வாழ விரும்பாமல் ஆமைகளைப் போலவே வாழ விரும்பின.

இக்தியாசாரஸ் *(Ichthyosaurs)* என்பது கடலில் வாழ்ந்த ரெப்டைல்களில் மற்றொரு வகையைச் சேர்ந்தது. இதற்கு மீன் பல்லி *(Fish lizard)* என்று பெயர். இவை பார்வைக்குப் பெரிய மீன்களைப் போலவே இருந்ததால் இதற்கு இப்பெயர் ஏற்றதுதான். மிகப் பெரிய இக்தியாசாரஸ், ப்ளீஸியோசாரஸ்களை விட இருபதடி குறைவாக இருந்தன. ஆனால் ப்ளீஸியோசாரஸ்களின் மொத்த நீளம் அவற்றின் நீண்ட கழுத்தினால்தானே? இக்தியா சாரஸும் நிலத்தில் வாழ்ந்த ரெப்டைல்களின் வழித் தோன்றல்களே. இவை சுவாச கோசங்களினாலேயே சுவாசித்தன. ஆகவே நீண்ட நேரம் இவைகளால் நீரின் அடியில் இருக்க முடியாது. ஆனால் வேறு பல வழிகளிலும் இவை நீரில்



வாழ்வதற்கு ஏற்ற உடலமைப்பைப் பெற்றிருந்தன. நீரைக் கிழித்துக் கொண்டு செல்லத் தக்க விதத்தில் இவற்றின் உடல் அமைந்திருந்தது. இவற்றின் வால் நிலத்தில் வாழ்ந்த ரெப்டைல்களைப் போலவோ ப்ளீஸியோ சாரஸைப் போலவோ இல்லாமல், சிறந்த கங்காண்களைப் போல அமைந்திருந்தது. கால்களோ துடுப்புக்கள் போலிருந்தன. கிட்டத்தட்ட மீனின் அமைப்பேதான்.

மீன் பல்லிகளான இவற்றுக்கு அந்தக் காலத்தில் வாழ்ந்த எந்த மிருகத்தையும் விட மிகப் பெரிய கண்கள். ஒரு மனிதனின் தலையளவு பெரிய கண்களை கொண்டிருந்தன இக்தியா சாரஸ்கள். இத்தனை பெரிய கண்களைச் சுற்றி வளையம் போன்ற எலும்பு இருந்தது. அதனால்தான் நீரின் அழுத்தத்தைச் சமாளிக்க இந்தக் கண்களால் முடிந்தது. மிக மங்கலான வெளிச்சத்திலும் தனது இரையை அது மிகச் சுலபமாகத் தேடிக் கண்டுபிடிக்க இப் பெரிய கண்கள் உதவியாக இருந்தன. இவற்றின் முக்கிய ஆகாரம் மீன்கள்தான் என்று சொல்லவா வேண்டும்?

ப்ளீஸியோ சாரஸுக்கு நிலத்தில் ஊர்ந்து போய் முட்டை இட முடிந்தது ஆனால் இக்தியா சாரஸினால் அது சாத்தியமல்ல. ரெப்டைல்களின் முட்டைகளோ நீரில் பொரிய வாய்ப்பில்லை. இந்தப் பிரச்னையை இக்தியா சாரஸ் எப்படிச் சமாளித்தன? தங்கள் முட்டைகளை அவை பொரியும்வரை தங்கள் உடலிலேயே வைத்துக்கொண்டிருந்தன. சின்னஞ் சிறிய இக்தியா சாரஸ்கள், உயிரோடு இவற்றின் உடலிலிருந்து வெளிப்பட்டன!

மோசாசாரஸ் *(Mosasaurs)* என்பது மூன்றாவது வகைக் கடல் வாழ் ரெப்டைல்கள். இவை பல உருவங்களில் காணப்பட்டன. அறுபதடி நீளம் முதல் மூன்றடி நீளம் வரையிலான பல்வேறு மோசாசாரஸ்கள் வாழ்ந்தன. இவைகளுக்கு நீண்ட கழுத்துக் கிடையாது. மீனைப் போன்ற உடலமைப்பும் இல்லை. அப்படியானால் இவை தோற்றத்தில் எப்படி இருந்தன? முதலைகளைப் போல. ஆனால் கால்களுக்குப் பதிலாகத் துடுப்புக்கள் இருந்தன.

ப்ளீயோசாரஸ், இக்தியாசாரஸ், மோசாசாரஸ் எல்லாமே ரெப்டைல்களின் ஆட்சி இவ்வுலகில் ஒரு முடிவுக்கு வந்தபோது அழிந்தன. இக்தியா சாரஸ் அழிந்தது ஏன் என்பது புரியாத புதிராக உள்ளது. மீனைப் போலவே அமைப்புக் கொண்ட இதனால் ஏனோ தொடர்ந்து வாழ முடியவில்லை.

ராஜா வருகிறார்.....பராக்!

ஒருமுறை ஒரு பெரிய அரசன் தன் பிறந்த நாளைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தான். நகரத்தின் முக்கிய வீதிகளில் அரசனது ஊர்வலம் செல்ல வகை செய்யப்பட்டது. வேடிக்கைகள், அழகுத் தோரணங்கள், எதற்கும் குறைவே கிடையாது. அரசனது ஊர்வலத்தின் முன்பாக சேனாபதி குதிரை மீதமர்ந்து சாலைகளில் போக்குவரத்தையும், மக்கள் நடமாட்டத்தையும் கண்காணித்துச் சென்று கொண்டிருந்தான். ஒரு திருப்பத்தில் ஒரு வயதான பக்கிரி அமர்ந்திருந்தான். சேனாபதி அவனை விலகி இருக்குமாறு கேட்டான். அதற்கு பக்கிரி, ''தங்கள் எஜமானர் ராஜா எனில் நான் பக்கிரி. நான் எழவேண்டிய அவசியமில்லை. ஊர்வலம் ஏன் வேறு வழியாகப் போகக் கூடாது?'' எனக் கூறினான்.

சேனாபதி திடுக்கிட்டு, ''தாங்கள் என்ன கூறினீர்கள்? அரசர் அரண்மனையில் வாழ்கிறார். தாங்கள் மண்ணிலும், தூசியிலும், தெருவிலும் வாழ்க்கையைக் கழிக்கின்றீர்'' எனச் சிறிது கடுமையாகப் பேசினான்.

பக்கிரியோ சிறிதும் சளைக்காதவராய் ''நான் மண்ணிலே பிறந்தேன். அதிலேயே வாழ்கிறேன். அரசன் சிறிது காலம் அரண்மனையில் வாழ்ந்தாலும் இறுதியில் மண்ணுக்குத்தான் வரவேண்டும்'' என்றான்.

சேனாபதியும் விட்டுக் கொடுக்காமல், ''அரசனிடத்தில் பெருமளவு செல்வம் உள்ளது. உம்மிடம் என்ன இருக்கிறது?'' எனக் கேலியாகக் கேட்டான்.

பக்கிரியோ, ''அவை மக்கள் பணமன்றி அரசனுடையது அல்லவே'' என விடை பகன்றார்.


சேனாபதி, ''அரசனிடத்தில் பெரும் படை உள்ளது'' எனப் பெருமையாகக் கூறினான். பக்கிரியும் உடனே கீழ்க்கண்ட பதில் உரைத்தார்: ''அரசனுக்குப் பெருமளவு எதிரிகள் உள்ளனர் ஆதலால் பெரும் படைக்கு அவசியம் உள்ளது. எனக்குப் பகைவர் இல்லை; ஆகையால் படையும் இல்லை.''


சேனாபதி, ''அரசனிடம் பல மந்திரிகளும், ஆலோசகர்களும் உள்ளனர்'' எனக் கூறியபோது, பக்கிரி ''ராஜனுக்குத் தன் அறிவில் நம்பிக்கை இல்லை ஆகையால் பிறர் ஆலோசனை தேவைப்படுகிறது. என் புத்தி சரியாக வேலை செய்வதால் அத்தகைய ஆலோசகர்கள் எனக்கு அவசியமில்லை'' என்றார்.


இறுதியாகச் சேனாபதி, அரசரிடம் பல வேலையாட்கள் இருப்பதைக் கூறியதும், பக்கிரி, ''அரசனால் தன் வேலைகளைத் தானே செய்துகொள்ள இயலவில்லை. எனவே வேலையாட்கள் வைத்துள்ளான். நான் அப்மாதிரி இல்லை'' என்றார்.

சேனாபதி இவ்வாறு அரசனை உயர்த்தவனாக்கி, பக்கிரியிடம் வழிகேட்க நினைத்தது தோல்வியே கண்டது. இந்த நேரத்தில் அரசனே அங்கு வந்தான். சேனாபதி எல்லாவற்றையும் விளக்கினான். அரசன், புத்திசாலி. அவன் பக்கிரியிடம் சென்று, ''எனக்குத் தாங்கள் தயைசெய்து வழி விடுங்கள். இதனை நான் ஓர் அரசனாக இருந்து வேண்டவில்லை. சாதாரண மனிதனாக இருந்து வேண்டுகிறேன்'' என்றான். பக்கிரியும் மிக மகிழ்ந்தவராய் சாலையை விட்டு அகன்றார். ஊர்வலமும் கோலாகலமாகச் சென்றது.

''கிஜி''




நந்து சுந்து மந்து ⑨
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
மகளின் உடல் நலத்துக்காகக் காஷ்மீர் வந்திருந்த வரின் வற்புறுத்தலின் பேரில் நந்து சுந்து அவர்கள் விடுதியில் தங்குகின்றனர்.
பலே, பலே! தலையாலே பந்தை ஜோரா அடிக்கறயே.
ரொம்பக் களைப்பா யிருக்கு. இந்த லெமனேடைக் குடிச்சா சோர்வுக் குச் சுகமாயிருக் கும்.
இவனுக்குள்ள களைப்பு எனக்கு மட்டும் இருக்காதா? 'வேணுமான்னு' மரியாதைக்குக் கூட என்னைக் கேக்கலியே. உள்ளே மேஜை மேலே இதே மாதிரி பாட்டில் இருந்தது போலிருக்கே.
மேஜை மீது ஏறி புட்டியை எடுக்கும் பொறுமை இல்லை மந்துவுக்கு.
ஆ, இதோ ஓடி வருதே நான் தேடி வந்த புட்டி! அவன் குடிச்ச சுகமான பானம் இதிலேயும் தான் இருக்கும் போலே!
தூ... தூ... தூ...! ஐயையோ, வாயெல் லாம் நெருப்பா எரியுதே. அம்மா, அம்மாடி....!
ஹி... ஹி... ஹி! அது நான் குடிச்ச லெமனேடுன்னு நெனைச்சயா? காரம் போட்ட டொமேடோ பச்சடியாக் கும் அது.
நந்து சுந்துவோடு அந்த வீட்டுக்காரரும் வேட்டைக் குப் போயிருந்தனர். வெறிகொண்ட மலைக்காளை ஒன்று ஊஞ்சலாடிக்கொண்டிருந்த கால் ஊனமான பெண்ணை நோக்கி ஓடி வருகிறது.
ஏய்... ஏய்... அந்தப் பெண்ணை ஏன் துரத்தறே? இங்கே வா... இதை வாங் கிக்கோ.
சொன்னாக் கேக்க மாட்டே? ..ம்... இதோ பார் மண்டை என்ன மாப் போறது பார் இப்போ


ஆ. அப்படித்தான்! இது வீரனுக்கு அழகு. ஓடியா.... என்னை உன்னாலே புடிக்கமுடியுமா பார்க்கலாம்.
அம்மாடி! என்னமாக் கொந்தி ஆகாசத்திலே வீசிட்டுது. ஐயோ, தண்ணீர்ப் பிப்பாய்....ய்...
இன்னும் உன் வெறி அடங்கலியா? உன் தலை என்ன சம்மட்டியா? யப்பா, போச்சு... எல்லாம் க்ளோஸ்!
பிப்பாய் தலையிலே கவிழ்ந்தும் உன் ஓட்டம் நிக்கலையே! எங்கே போய் மோதிக்கப் போறியோ.
ஹய்யா.... நல்லவேளை நான் தப்பினேன். மரம் என்னமா அதிர்ந்து குலுங்குது.
திரும்பி வந்த நந்து சந்து, மூர்ச்சையாக் கிடக்கும் காளையைப் பார்த்து...
இந்த முரட்டுக் காளை எப்படி இங்கே வந்து மூர்ச்சையாக் கிடக்கு?
உங்க மந்துவோட சாகஸம் தான் அது. என் சகோதரியைக் காப்பாத்தினதும் அவன்தான்.
அது மயங்கி விழுந்தா எனக்கென்னஆச்சு? என் அருமையான பந்து இப்படிப் போச்சே.

நோயாளி: டாக்டர்! இந்த உடம்புக்காக ஆயிரக் கணக்கில் வைத்தியச் செலவு செய்து வருகிறேன்.
டாக்டர்: அடப் பாவமே, முதலிலேயே என்னிடம் வந்திருக்கக் கூடாதோ?

— சா. பழனியப்பன்





"அப்படி என்ன அந்தக் கண்காட்சியில் சிறப்பு?"
"அங்கே பார்வைக்குத் தண்ணீர் வைத்திருக்கிறார்களாம்!"

— இரா. மணிவண்ணன்

வாத்தியார்: நீங்கள் யாராவது இன்று துணிச்சலான காரியத்தைச் செய்திருக்கிறீர்களா?
மாணவன்: நான் செய்திருக்கிறேன் சார்.
வாத்தியார்: என்ன செய்தாய்?
மாணவன்: இன்று வீட்டுப் பாடம் செய்யாது வந்திருக்கிறேன்.

—எல். உமா



நண்பர்: நான் எழுதிய பொன்னான நேரம் என்ற புத்தகத்தைப் பூராவும் படித்தீர்களா?
மற்றவர்: இல்லை. முதல் வரியான 'கண்டகண்ட புத்தகத்தைப் படித்து நேரத்தை வீணாக்காதே' என்பதைப் படித்ததும் மூடிவைத்து விட்டேன்.

— போத்தனூர் சாரதி

சிரிக்கச் சிரிக்க...



வைத்தியர்: இரண்டு மணிக்கு ஒரு ஸ்பூன் விதம் இரண்டு நாளைக்குச் சேர்ந்தாற்போல் சாப்பிட்டு வாருங்கள்.
நோயாளி: அது சரி, என் வீட்டில் மொத்தம் நான்கு ஸ்பூன்கள்தானே இருக்கின்றன!

—எம். தாஹா இப்ராஹிம் புஹாரி

கோர்ட் ஊழியர்: சத்தியமாச் சொல்றேன்னு மூணு தரம் சொல்லுங்க.
சாட்சி: சத்தியமா... சொல்றேன்? சத்தியமா... சொல்றேன்? சத்தியமா... சொல்றேன்!

—கே. வெங்கடசாமி



ராஜு துப்பறிகிறான்!

சியாமளா

பிற்பகல் முழுதும் அந்தக் கண்காட்சியில் சுற்றி அலைந்துவிட்டுவெளியே வந்தனர் ரமேஷ், ராணி, ராஜு மூவரும் அவர்களுக்கு கால்கள் வலி எடுத்தாலும் கண்காட்சியைப் பார்த்த சந்தோஷம் அதிகமாக இருந்ததால் வலியை பொறுத்துக் கொண்டார்கள். வெளியே வந்ததும்தான் களைப்புத் தெரிந்தது.

''ரமேஷ், ராணி! நீங்க இரண்டு பேரும் இங்கேயே இருங்கள். நான் போய் நமக்கு வேர்க்கடலை வாங்கிக் கொண்டு வரேன். அதை கொறித்துக் கொண்டே வீட்டுக்குப் போகலாம்'' என்றான் ராஜு.

''வேண்டாண்டா, ராஜு....'' என்றான் ரமேஷ்.

''இல்லே. நீ எனக்காக எத்தனை செலவு செய்திருக்கிறாய். உங்களுக்கு ஏதாவது தர எனக்கும் ஆசையாயிருக்கு. என்னால் முடிந்தது இதுதான். என்று சிரித்தான். அந்தச் சிரிப்பில் மிதந்த ஏக்கமும் குரலில் வழிந்த தன்மானமும் ரமேஷுக்குப் புரிந்தது. அவன் விருப்பத்தை தடை செய்ய முடியவில்லை. ''சரிடா, ராஜு. சீக்கிரம் வா'' என்றுஜனநடமாட்டம் அதிகம் இல்லாத ஒதுக்குப் புறமாகத் தன் தங்கை ராணியோடு நின்று கொண்டான் ரமேஷ். ராஜு சந்தோஷத்தோடு கடையை நோக்கி ஓடினான்.



ரமேஷும் ராணியும் ஒரு பெரிய தொழிலதிபரின் குழந்தைகள். ராஜு ஏழைக் குமாஸ்தாவின் மகன். ஆனால் அவர்களுடைய நட்பில் வித்தியாசம் இருக்கவில்லை. எப்போதும் அவர்கள் மூவரும் சேர்ந்துதான் காணப்படுவார்கள். அப்போது விடுமுறை. ரமேஷின் அப்பாவும் அம்மாவும் திடீரென்று ஒரு விசேஷத்திற்கு காஞ்சிபுரம் போக நேர்ந்தது. வீட்டில் 'போர'டிக்கிறதென்று ரமேஷும் ராணியும் ராஜுவோடு கண்காட்சிக்கு வந்தனர். ரமேஷுக்கும் ராஜுவுக்கும் பதினான்கு வயதிருக்கும். இருவரும் ஒன்பதாவது படிக்கும் மாணவர்கள். ராணி அவர்களைவிட இரண்டு வயது சின்னவள். பணக்கார மமதையோ, பகட்டான ஆடம்பரமோ இல்லாமல் இருவரும் எளிமையாக இருப்பார்கள். ஏழையான ராஜுவிடம் பழகும் விதமே உன்னதமாக இருக்கும்.

''காலே வலிக்கிறதண்ணா. டாக்சியில் வீட்டுக்குப் போயிடலாம்..''' என்றாள் ராணி. சிவந்த முகம் வாடி வதங்கியிருந்தது. நீண்ட கண்களில் சோர்வு. நெற்றியில் முத்து முத்தாக வியர்வை. ரமேஷ் தங்கையை அன்பாகப் பார்த்தான். அதே சமயம் ஒரு கார் அவர்கள் அருகில் கிரீச் என்று வந்து நின்றது. பின் சீட்டில் இருந்த ஒருவன் கதவைத் திறந்து விட்டான்.

''நீங்க தாமோதரம் ஐயா வீட்டுக் குழந்தைகள்தானே? வாங்க, ஏறுங்க, நாங்க வீட்டிலே கொண்டு விடுகிறோம்'' என்றான்.

தந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடன் ரமேஷும் ராணியும் சந்தோஷத்துடன் ஏறி அமர்ந்து கொண்டனர். வண்டி கிளம்பியது.

''இருங்க இருங்க. எங்களோடு வந்த சிநேகிதன் வர வேண்டும். கொஞ்சம் இருங்க ....'' என்று அவசரமாக ரமேஷ் கூறினான். ஆனால் வண்டி நிற்கவில்லை. ''ஐயையோ... ராஜு தனியாக எப்படி வருவான். பாவம் ... கொஞ்சம் வண்டியை நிறுத்துங்க டிரைவர்!'' ராணி கூவினாள். பின் சீட்டில் முதலில் அமர்ந்திருந்தவன் ரமேஷும் ராணியும் ஏறிய பின்னர், முன் சீட்டில் ஏறி அமர்ந்து விட்டான். அவன் சட்டென்று திரும்பி, ''ஏய், சத்தம் போடாதீங்க. சத்தம்போட்டா, ஒரே சதக்...!''என்று மிரட்டினான். அவனுடைய சிவந்த கண்களும் கொடுவாள் மீசையும், அந்த முரட்டுச் சொற்களும் குழந்தைகளை பயமுறுத்தின. இருவரும் சில விநாடிகள் பயத்தோடு அவனைப் பார்த்துவிட்டு மௌனமாக உட்கார்ந்து விட்டனர். அந்த மீசைக்காரனும் டிரைவரும் ஏதேதோ பேசினார்கள்.

அப்போது ரமேஷ் முதலில் பயந்தாலும் பிறகு தெளிந்தான். மெதுவாக ராணியின் நடுங்கும் கைகளைப் பற்றி அழுத்தி ''பயப்படாதே, — அழாதே. நான் இருக்கிறேன். உன்னிடம் இருக்கும் கிளிஞ்சல்களைக்கொடு''




என்று ராணியின் கைப் பையிலிருந்த கிளிஞ்சல்களை எடுத்துக் கொண்டான்.

ஆபத்து சமயங்களில் அழுது, பயந்து அமர்க்களம் பண்ணுமல் சமயோசித மாக தைரியமாக நடந்து கொள்ள வேண்டுமென்று அவனுடைய அப்பா சொல்லுவது நினைவுக்கு வந்தது. இந்த முரடர்கள் தங்களைக் கவர்ந்து செல்லுவது பணத்திற்காக என்று தெரிந்து கொண்டான் புத்திசாலியான ரமேஷ். அதனுல் இவர்கள் தங்களை கொல்ல மாட்டார்கள் என்று தைரி யம் அடைந்தான். சில விநாடிகள் யோசித்து முடிவுக்கு வந்தவன் மெது வாகச் சிறிது திறந்திருந்த காரின் கண்ணுடி வழியாகச் சில கிளிஞ்சல்களைத் தெருவில் போட்டான். சில கஜ தூரங் களுக்கு ஒருமுறை அப்படிச் சில கிளிஞ் சல்களைக் கீழே போட்டுக் கொண்டே வந்தான். சில நிமிஷங்களுக்குப் பிறகு கார் ஓர் இடத்தில் நின்றது. காரி லிருந்து இறங்கிய மீசைக்காரன் பின் கதவைத் திறந்து ரமேஷையும் ராணி யையும் முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டு அருகில் இருந்த ஒரு வீட்டிற் குள் நுழைந்தான்.

ரமேஷ் சுற்றுமுற்றும் பார்த்தான். நிறைய மரங்கள் இருந்தன. அவை அந்த வீட்டை மறைப்பது போல இருந் தன. தெருவில் எதிர்ப்பக்கம் வெறும் வெட்ட வெளி. பக்கங்களில் ஏதோ சில குடிசைகள், சின்னச் சின்ன வீடுகள். இருந்தன. அந்த இடம் என்னவென் பது ரமேஷுக்கு புரியவில்லை. மீசைக் காரன் இருவரையும் ஒரு அறையில் தள்ளி பூட்டினுன். வெளியே அவன் யாரையோ அழைத்துப் பேசுவது அவர்களுக்குக் கேட்டது. பிறகு கார் கிளம்பிச் செல்லும் ஒலியும் கேட்டது.

''ராணி! நீ கிளிஞ்சல்களை மூட்டை மூட்டையாகச் சேர்த்துக் கொள்ளும் போது நான் சிரிப்பேன். ஆனுல் அது இந்த ஆபத்துக்கு கொஞ்சம் உதவும் என்று நம்புகிறேன்'' என்றுன் ரமேஷ். ராணி விம்மி விம்மி அழ ஆரம்பித் தாள். என்ன இருந்தாலும் அவள் பெண்தானே. பயத்தினுல் அந்த இளம் உடல் நடுங்குவதைக் கண்ட ரமேஷ் தனக்கு அண்ணன் என்கிற பொறுப்பும் இருப்பதை உணர்ந்தான். தங்கையை அன்புடன் அணைத்துக் கொண்டான். அலைந்த களைப்பு, பயம், பசி, எல்லா மாக ராணியைத் துவளச் செய்தன.

அப்போது கதவைத் திறந்து கொண்டு ஒரு கிழவன் வந்தான். அவன் கையில் பலகாரப் பொட்டலங்கள் இருந் தன. ''குழந்தைகளா! பிடிவாதம் பண்ணுமல் இதைச் சாப்பிடுங்கள்... சூடா டீ கொண்டாறேன்....'' என்று சொல்லி விட்டு மறுபடி கதவைப் பூட்டிக் கொண்டு போய் விட்டான். தங்க



ளுடைய நிலைமையை ஓரளவு உணர்ந்து கொண்ட இருவருமே அடங்கி இருந்த னர். சூடான டீயை இரண்டு டம்ளரில் கொண்டு வந்த கிழவன் பிறகு ஒரு பாயையும் கொண்டு வந்து விரித்தான். சோர்ந்திருந்த ராணி படுத்துவிட்டாள். கிழவனிடமிருந்து எந்த உதவியும் பெற முடியாது என்று உணர்ந்த ரமேஷும் மௌனமாகப் படுத்துக் கொண்டான். ஒரு சின்ன விடி விளக்கை அங்கு சுவற்றில் மாட்டிவிட்டுக் கிழவன் திரும்பிப் போய் அறையைப் பூட்டிக் கொண்டு போய் விட்டான். களைப் பினுலும் பயத்தினுலும் ராணி தூங்கி விட்டாள். ரமேஷுக்கு நிறையச் சிந்திக்க வேண்டியிருந்ததால் தூக் கத்தை உதறியபடி யோசனையில் ஆழ்ந் தான். அவன் இளம் உள்ளத்தில் பய மும் நம்பிக்கையும் மாறி மாறி அலை

மோதின. அவன் எதிர்பார்த்தபடி ராஜு வருவானா.....

கையில் வேர்க்கடலையுடன் வந்த ராஜு ரமேஷையும் ராணியையும் காணாமல் திகைத்தான். 'எங்கே அவர்கள்?'

''பையா, அவர்களைத் தேடறியா?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். ஒரு மரத்தின் அடியில் படுத்திருந்த நொண்டிப் பிச்சைக்காரன் அவனை 'வா' என்று அழைத்தான். ராஜு அங்கு சென்றான்.

''பையா! நீயும் அவர்களோடு வந்தவனா...? நல்ல வேளை!...தப்பிச்சே...!''

''என்ன..... என்ன?'' என்று பதறி வினவினான் ராஜு.

அவன் படுத்திருப்பதைக் கவனிக்காமல் மரத்தின் பின்னால் இரண்டு பேர் பேசியதைச் சொன்னான்.



''அதோ நிற்கிற பெண்ணையும், பையனையும் கவனிச்சுக்க... அவர்களை எப்படியாவது காரில் ஏத்திக்கிட்டு மாயாண்டி கோயில் வீட்டுக்குப் போகணும் ஜாக்கிரதை...'' என்று சொன்னான். சில நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு கார் அந்தக் குழந்தைகள் அருகில் சென்று அவர்களை ஏற்றிக் கொண்டு போனதையும் பிச்சைக்காரன் சொன்னபோது ராஜு பீதியும் கலவரமும் அடைந்தான்.

''பையா, ஜாக்கிரதை! போலீஸ் கிட்டே சொல்லி அவங்களை மீட்டுக்க, போ....'' என்றான் பிச்சைக்காரன்.

ராஜு பிச்சைக்காரனுக்கு நன்றி சொல்லக்கூட மறந்து கலக்கத்துடன் நடந்தான், தனிமையில் ஒரு வழியும் தெரியாமல். 'நண்பர்களை மீட்பது எப்படி? போலீஸுக்குச் சொன்னால் அவர்களுடைய உயிருக்கே ஆபத்து வந்து விட்டால்? இந்தச் சமயம் அவர்களுடைய பெற்றோரும் இல்லையே!... என்ன செய்வது..? என்ன செய்வது...?'

பிற்பகல் முழுவதும் அலைந்த களைப்போடு இந்தக் கலக்கமும் சேர்ந்து நந்து தடுமாறினான். கால் போனபடி நடந்தவனின் எதிரில் வந்து கொண்டிருந்த சில சிறுவர்களின் பேச்சு அவனைத் தடுத்து நிறுத்தியது.

''ஆமாண்டா, பழனி! காரிலேயிருந்துதான் இந்தக் கிளிஞ்சல்களை ஒரு பையன் போட்டான்... நான்கூடப் பார்த்தேன்.....''

''ஆமாம், ஆமாம்! காருக்குள்ளே யாரோ அழுறாப்போலக் கூடச் சத்தம் கேட்டதுடா....!''

ராஜு சட்டென்று அவர்களை நெருங்கி ''அந்தக் கார் எந்தப் பக்கம் போச்சு, தெரியுமா?'' என்று வினவினான். கிளிஞ்சல்களைப் பார்த்ததுமே அவனுக்கு ராணியின் பளிங்கு முகம் நினைவுக்கு வந்தது.

''இதோ, இப்படித்தான் போச்சு..'' என்றான் ஒரு சிறுவன். ராஜுவின் மனத்தில் ஒரு நம்பிக்கை மின்னலெனத் தோன்றியது. அந்தப் பையன் காட்டிய வழியில் நிதானமாக நடந்தான். அவன் கண்கள் கீழே பார்த்துக் கொண்டே வந்தன. சில கஜ தூரம் நடந்ததும் அவன் கண்களில் கிளிஞ்சல்கள் தெரிந்தன. உற்சாகத்தோடு துள்ளினான், கீழே சிந்த கிளிஞ்சல்களை எடுத்து ராஜு பாக்கெட்டில் போட்டுக் கொண்டு மேலும் நடந்தான். பாக்கெட்டில் கைவிட்ட போது அவனுடைய டைரி தட்டுப்பட்டது. பளிச்சென்று ஓர் உண்மை தோன்றியது. சட்டென்று எடுத்தான். தான் நடந்து போகும் வழியைத் தெரிந்து வைத்துக் கொள்ள அந்த இடங்களில் பார்க்கும் கடைகளின் பெயர், சில இடங்களில் ஹோட்டல்... சினிமா தியேட்டர் முத



லியவற்றையும் பெயர்களையும் எழுதிக் கொண்டே நடந்தான். ரமேஷ் போட்டிருந்த கிளிஞ்சல்கள் அவனுக்கு வழி காட்ட அங்கங்கே நின்று அந்த இடங்களை எழுதிக் கொண்டும், நன்றாகப் பார்த்து மனத்தில் பதிய வைத்துக் கொண்டும் நடந்தான். ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக நடந்தவன் ஓர் இடத்தில் ராணியின் கர்ச்சிப்பு சில கிளிஞ்சல்களோடு முடிச்சாகக் கிடந்ததையும் எடுத்துக் கொண்டான். அவன் யோசித்தான்.... கிளிஞ்சல் ஆகி விட்டதா ?.... அல்லது அவர்கள் வந்திருக்கும் இடம் வந்துவிட்டதா ?

இருள் சூழ ஆரம்பித்திருந்தது. அந்தப் பகுதியில் அதிக ஜன நடமாட்டம் இல்லை. சில சில குடிசைகள், ஓட்டு வீடுகள், கடைகள் இருந்தன. அவன் நின்ற இடத்துக்கு எதிரில் ஒரு சிறிய தெரு. முனையில் ஒரு கோயில் தெரிந்தது. அப்போது புல் கட்டுடன் ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள்.

''ஏங்க... மாயாண்டி கோயில் எது?' என்று வினவினான்.


''இதோ... இதுதான் மாயாண்டி கோயில்'' என்றாள் அந்தப் பெண்.

ராஜு சந்தோஷம் அடைந்தான். இடம் தெரிந்துவிட்டது. ஆனால் இந்தத் தெருவில் எந்த வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறார்களோ....? அதை எப்படிக் கண்டு பிடிப்பது? இருட்டிவிட்டதால் இனி மேல் இங்கு நிற்கக் கூடாது என்று எண்ணியபடி வந்த வழியாகத் திரும்பி நடந்தான். மெயின் ரோடுக்கு வந்ததும் பஸ் ஏறி முதலில் ரமேஷின் வீட்டுக்குப் போய் அங்குள்ள சமையல்காரனிடம், ''கண்காட்சிக்கு வந்திருந்த மாமா அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போய் விட்டார்......'' என்று சொல்லிவிட்டு, பிறகு தன் வீட்டுக்குச் சென்றான்.

பொழுது விடிந்தது. தெருவைக் கண்டு பிடித்தது போல் அந்த வீட்டையும் தெரிந்து கொண்டு பிறகு போலீஸுக்கோ அல்லது ரமேஷின் உறவினர்களுக்கோ சொல்லி மீட்கலாம் என்று ராஜு முடிவு செய்திருந்தான். கிழிந்த நிஜாரையும் சட்டையையும் போட்டுக் கொண்டு, தலையைத் தாறு மாறாகக் கலைத்துக் கொண்டு பொழுது விடிந்ததுமே கிளம்பினான் ராஜு. அவன் கையில் போகி பண்டிகைக்கு அடிக்கும் டமாரம் இருந்தது. டைரியை அடிக்கடி கவனித்துக் கொண்டே மாயாண்டி கோயில் வரை வந்துவிட்டான்.

அதற்குப் பிறகு பைத்தியக்காரச் சிறுவனைப் போல் டமாரத்தை 'டகடக' என அடித்துக் கொண்டே ஏதோ

வாய்க்கு வந்த பாட்டைப் பாடிய படி. துள்ளிக் குதித்து ஆடிக் கொண்டே சென்றான். மெதுவாகச் சில இடங்களில் நின்று நின்று பாடி ஆடினான்..... தெருவில் போய் வந்து கொண்டிருந்த ஓரிருவர், ''பாவம்.... சின்னப் பையன்.... பைத்தியம் போல் இருக்கு....'' என்று இரக்கத்துடன் ஐந்து பைஸா பத்துப் பைசா போட்டு விட்டு நடந்தனர். அவன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். அவன் திட்டம் வெற்றி பெறுமா....? படக் படக் என்று இருதயம் அடித்துக் கொண்டது.



அதே சமயம் ரமேஷும் ராணியும் துள்ளலுடன் எழுந்து ஜன்னல் பக்கமாக வந்தனர். ரமேஷ் எதிர்பார்த்தது நடந்து விட்டது. அவன் நண்பன் ராஜு கிளிஞ்சல்களின் வழியே வந்துவிட்டான். அந்த டமாரம் நந்துவின் வீட்டில் அவர்கள் கொட்டம் அடிக்கும் போது விளையாடி யிருக்கிறார்களே....! ஜன்னல் மூடியிருந்தாலும் சின்னச் சின்ன ஓட்டைகள் இருந்தன. அதன் வழியே கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார்கள். அவர்கள் முகம் மலர்ந்தது. ''ராணி அவசரப்படாதே.... நீ சந்தோஷப்படுவது கிழவனுக்குத் தெரியக் கூடாது. அழுவது போலவே இரு....'' என்றான் ரமேஷ்.

இரவே அவன் யோசித்து வைத்திருந்தான். காலையில் எழுந்ததும் கிழவன் அவர்களைப் பாத்ரூமுக்கு அழைத்துப் போனான். அங்கு ஒரு மூலையில் கிடந்த கரித் துண்டுகளையும் கிழிந்த பேப்பர்களையும் கிழவனுக்குத் தெரியாமல் பையில் வைத்துக் கொண்டான்.

பாத்ரூமுக்குப் போகும் வழியில் ஒரு நீண்ட வராந்தா இருந்தது. அது தெருவைப் பார்த்தபடி இருந்தது. வராந்தாவிலிருந்து சில கஜ தூரத்தில் வீட்டின் காம்பௌண்ட் சுவர் இருந்தது. குட்டையான சுவர்தான். ரமேஷ் இதை யெல்லாம் நன்றாகக் கவனித்துக் கொண்டான். கிழவன் டீயும் பலகாரங்களும் கொடுத்துவிட்டுப் போன பிறகு ரமேஷ் கிழிந்த பேப்பரில் பெரிதாக இருந்த ஒன்றை எடுத்துக் கரி கட்டியினால் எழுதினான்.

''கிளி என்ன பழம் சாப்பிடும்....?

''கிளி கொய்யப்பழம் சாப்பிடும்.''

''ஆமாம். கொய்யாப் பழம்.... சரி.... கொய்யா.... கொய்யா மரம்... கொய்யாப் பழம், வாசனை... கம கம! கிளிகள் இருக்கின்றன......''

''ர...ர...ரா.''

எழுதி முடித்தான். அவர்களுடைய சங்கேத பாஷை அது. கடிதம் போல எழுதினால் தப்பித் தவறிக் கிழவனிடமோ மீசைக்காரனிடமோ கிடைத்து விட்டால் ஆபத்தாச்சே....? ஆகவே ரமேஷ் சாமர்த்தியமாகப் புரியாத வகையில் எழுதினான்.

ராணி அழுவது போல் உட்கார்ந்திருக்க ரமேஷ் கதவைத் தட்டி, ''தாத்தா.... தாத்தா....'' என்று கூப்பிட்டான்.

கிழவன் கதவைத் திறந்தான்.

'' தாத்தா.... தங்கச்சிக்கு வாந்தி வராப் போல இருக்குதாம்... பாத்ரூமுக்கு அழைச்சுக்கிட்டுப் போகட்டுமா.....?'' என்றான்.

'' சரி.... அழைச்சுக்கிட்டுப் போ '' என்று அவன் அங்கேயே உட்கார்ந்து அரிசியில் கல் பொறுக்க ஆரம்பித்தான். ராணியின் கையைப் பிடித்து அழைத்துப் போனான் ரமேஷ். ராணியும் தள்ளாடும் நடையில் நடந்தாள். ராணி பாத்ரூமில் வாந்தி எடுப்பது போல், ''உ...வ்வே... உவ்..வே....'' என்று பெரிதாகச் சத்தம் போட்டாள். அப்போது ரமேஷ் தன்னுடைய கர்ச்சிப்பில் கரித் துண்டுகளைக் கனத்துக்காக வைத்து, எழுதிய பேப்பரையும் மடித்து வைத்து நன்றாக முடிந்து வராந்தாவிலிருந்து குறிபார்த்துத் தெருவில் வீசி எறிந்தான். சில விநாடிகள் நின்று கவனித்தான்.

டக டக என்று அடித்துத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த ராஜுவின் காலடியில் தொப் என்று அந்த முடிச்சு விழுந்தது. அவன் நாலு பக்கமும் பார்வையைச் சுழலவிட்டு யாரும் சந்தேகப்பட முடியாதபடி குனிந்து அந்த முடிச்சை எடுத்து அவசரமாகப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். அவன் குனிந்து எடுத்துக் கொண்டதை வராந்தாவிலிருந்து பார்த்த ரமேஷின் முகம் மலர்ந்தது. அதை வெளிக் காட்



பாசமிக்க எங்கள் மாமா அமெரிக்காவிலே - இதைப் பார்த்து வாங்கி அனுப்பி வைத்துக் கடிதம் எழுதினர் மோசமாகப் பெட்ரோல் விலை ஏறிப்போனதால் - அங்கு மூணு சக்கர வண்டிகள்தாம் 'மோஸ்தர்' ஆகுதாம்.

வண்ணப்படம்: ராகவராஜா —குடுக்கையார்

டாமல், ''ராணி.... ராணி... ஆச்சா! வாய் அலம்பிக் கொண்டு வா....ம்மா'' என்ருன்.

அவர்கள் அறைக்குள் நுழைந்ததும் கிழவன் கதவைப் பூட்டிவிட்டான். இருவரும் தங்கள் முயற்சி வெற்றி அடையக் கடவுளை வேண்டியபடி மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

ராஜு அந்த இடத்தைக் குறிப்பாக, நன்ருகக் கவனித்துக் கொண்டு டமாரத்தை அடித்துப் பாடிக் கொண்டே அந்தத் தெருவைக் கடந்து பிறகு வேகமாக நடந்தான். ஒரு மரத்தடியில் நின்று அந்தத் துணி முடிச்சை அவிழ்த்தான். 'ஆ... இது... ரமேஷின் கர்ச்சிப்...' அவன் வாய் முனகியது. கரித் துண்டுகளைக் கொட்டிவிட்டு அதைப் படித்தான். அவனுக்குப் புரிந்துவிட்டது. கொய்யா மரங்கள் நிறைய இருந்த வீடுதான் அவர்கள் இருக்கும் இடம்.

அதற்குப் பிறகு ராஜு சுறுசுறுப்புடன் நடந்து வீட்டை அடைந்து தன் வேஷங்களைக் கலைந்து விட்டு நல்ல உடை அணிந்து ரமேஷின் வீட்டுக்குச் சென்ருன். அப்போதுதான் ரமேஷின் பெற்ருேரும் வீடு திரும்பியிருந்தார்கள். ராஜு அவர்களிடம் விவரமாகக் கூறினுன். அவர்கள் முதலில் பயந்து பிறகு வியப்பும் சந்தோஷமும் அடைந்தனர். தான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருல் அந்தக் கயவர்களுக்கு யார் மூலமாவது செய்தி எட்டி, குழந்தைகளின் உயிருக்கே ஆபத்து வரும் என்று எண்ணிய தாமோதரம் ஒரு கடிதம் எழுதி ராஜுவிடம் கொடுத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி வைத்தார். பிறகு எல்லாம் துரிதமாக நடந்தன.

மீசைக்காரனும் மற்றும் அவனைச் சேர்ந்த இருவரும் கொய்யாத்தோப்பு வீட்டினுள் நுழைந்த போது மறைந்திருந்த போலீஸ்காரர்கள் தாவி வந்து அவர்களைப் பிடித்துக் கொண்டனர். பிறகு ரமேஷுக்கும் ராணிக்கும் விடுதலை கிடைத்தது.

நீரூற்றும் ஆ(ர்)டீஷன் கிணறும்

தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடும் மோசமான நிலையில் நகரங்களில் நீரூற்றுக்கள் தோன்றுமானல்? திடீரென்று எத்தனை குஷியான ஐஸ்கிரீம் செய்தி! நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்து வறண்டுவிட்ட நிலையில் பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை எப்படி வெளியே கொண்டு வரலாம் என்ற முயற்சிகளில் இறங்குகிருன் மனிதன்.

நீரூற்று (Spring) என்பது என்ன? பூமியில் இயற்கையாக ஏற்பட்டுள்ள இடைவெளி வழியாகப் பூமிக்கு அடியில் தேங்கியுள்ள தண்ணீர் பீரிட்டுக் கொண்டு மேலே வருவதுதான் நீரூற்று. மழைக் காலங்களில் தண்ணீர் பாறை இடுக்கு, பூமியின் வெடிப்பு இவை வழியே பூமியின் ஆகர்ஷண சக்தியினுல் இழுக்கப்பட்டுக் கீழே போய்த் தேங்குகிறது. பூமிமட்டத்துக்கு அடியில் மாறுபட்ட ஏற்றத் தாழ்வுகளில் பாறை இடைவெளிகள் முழுதும் நீரால் நிரம்பி விடும். இது பூமிக்குக் கீழுள்ள நீர்வளம். பள்ளத்தாக்குகள், பூமி மட்டத்துக்குத் தாழ்வான பகுதிகள், நீர்மட்டத்துக்குக் கீழேயுள்ள இடங்கள் இங்கெல்லாம் பாறைகளில் ஏற்படும் பிளவுகளின் வழியாகப் பூமிக்கு அடியில் தேங்கி நிற்கும் தண்ணீர் வெளியேறும். சில நீரூற்றுக்களில் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்கும். இத்தகைய ஊற்று நீர் பூமியின் அடியில் உள்ள நீர்த் தேக்கத்திலிருந்து வெளிப்படும். சில நீரூற்றுக்களில் மாரிக் காலத்தில் மட்டுமே நீர் இருக்கும். இவை அருகிலுள்ள நீர் நிலைகளின் தண்ணீரிலிருந்து வெளிப்படுபவை. நீர் நிலைகளில் அவற்றின் நீர் மட்டம் குறையுமானல் இவ்வூற்றுக்களிலும் நீர் சுரக்காது.

ஆ(ர்)டீஷன் கிணறு என்பது பூமியின் அடியிலிருந்து மேல் மட்டத்துக்கு நீர் குமிழியிட்டு இயற்கையாகவே வெளிப்படும். இரு பாறைப் படிவங்களுக்கிடையே உள்ள மணல் சரளைப் பகுதிகளில் நீர் தேங்கி நிற்பதற்கான வசதி இருக்கும். மேலும் கீழும் உறுதியான பாறை—இடையே சரளை மணல். பூமியைக் குடைந்து இந்த இரு பாறைகளுக்கிடைப்பட்ட பகுதியில் குழாய்களை இறக்கினுல் நீரின் அழுத்தத்தினுல் இக்குழாய்கள் வழியே தண்ணீர் குபு குபு வென்று மேலே வந்து கொட்டும். இதுவே (Artesian) கிணறு.

பரிசுத்தம்

ஜெமினி-ஏ-பாஜி

பழைய காலத்தில் குருகுல வாசம் செய்து வந்த ஓர் இளைஞன் ஒரு நாள் உணவு உட்கொள்ளும்போது குருவிடம் அன்று இட்ட நெய், விளக்கெண்ணெய் நாற்றம் அடிப்பதாக நொந்து கொண்டு புகார் செய்தான். இதைக் கேட்ட குரு, ''அப்பனே! நீ இங்கே குருகுல வாசம் செய்ய வந்த நாள் முதல் இதே விளக்கெண்ணெய்தான் சாப்பிட்டு வந்தாய். இவ்வளவு நாட்களாகப் படிப்பில் புத்தி சென்றதால் நாக்கின் ருசி குறைந்திருந்தது. புலனடக்கம் குறைந்ததால் இனி உனக்குப் படிப்பு வராது. உன் குருகுல வாசம் முடிந்தது'' என்று சொல்லி அவனை அனுப்பி விட்டார்.

வெளியேறிய சிஷ்யன் தானே சாஸ்திரங்களைப் படித்தறிய உறுதி பூண்டான். சாஸ்திரங்களில் ஓர் இடத்தில் ''எச்சில் பரிசுத்தம்; இறந்தவன் போர்வை வெகு சுத்தம்; வாந்தி பண்ணினது மிகவும் சுத்தம்'' என்று இருந்தது. இதன் பொருள் இளைஞனுக்கு விளங்கவில்லை. முன்னாள் குருவிடம் சென்று கேட்டறியவும் மனமில்லை. 'சாஸ்திரம் பொய்க்காது' என்று எண்ணி ஒரு நாள் பகலில் ஓர் இல்லத்தினரின் வீட்டுக்குச் சென்றான். வாசலில் வந்து விழும் எச்சில் இலையை நோக்கி விரைந்தான். அப்போது அங்கிருந்த பெரியவர் ஒருவர் அவனைத் தடுத்து ''உன்னைப் பார்த்தால் படித்தவன் போல் காண்கிறாய்; ஏன் இப்படிப்பட்ட அருவருப்பான செயலைச் செய்கிறாய்?'' என்று கேட்டார்.

அப்போது அவன், ''நான் தனியாகவே சாஸ்திரங்களைப் படித்து வருகிறேன். 'எச்சில் பரிசுத்தம்; இறந்தவன் போர்வை வெகு சுத்தம்; வாந்தி பண்ணினது மிகவும் சுத்தம்' என்று சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றனவே?'' என்றான்.

அதற்குப் பெரியவர், ''சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதை அப்படியே பொருள் செய்து கொள்வது கூடாது. சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் தொன்று தொட்டு இருந்து வரும் அநுபவ முறையில் பொருள் கொள்ள வேண்டும்'' என்று தொடங்கி இளைஞனின் சந்தேகத்தைத் தெளிவாக்கினார்.

''பசுவைக் கறப்பதற்கு முன் கன்றுக்குட்டியை ஊட்ட விடுகிறோம். கன்று பால் சாப்பிட்டதும் பசுவின் மடியை அலம்புவதில்லை. கன்றின் எச்சில் பட்ட காம்பிலிருந்து கறந்த பால் பரிசுத்தம். அதை ஆண்டவனுக்கும் அபிஷேகம் செய்யலாம். இதுதான் எச்சில் பரிசுத்தம்'' என்றார். அவன் அவரையே உற்று நோக்கினான்.

''இரண்டாவது, பட்டுப் பூச்சி இறந்த பின்தான் அதன் உடலிலிருந்து பட்டு நூலை இழுத்து அதை ஆடையாக நெய்கிறார்கள். பட்டு வெகு சுத்தம். பூஜா காலத்தில் அதை உடுத்துவது சிறந்தது. ஆண்டவனுக்கும் அது உவப்பானதே'' என்றார் முதியவர்.

மீண்டும் அவ்விளைஞன் கேட்டான்: ''வாந்தி பண்ணினது மிகவும் சுத்தம் என்றால்?''

''மருத்துவத்தில் தேனை மிகவும் சிறந்ததாகக் கொள்கிறார்கள். தேனீ தன் உடலில் சேகரித்து வைத்துப் பிறகு வெளியே கக்கிய பொருள் தானே தேன்? ஆனாலும் ஆண்டவனுக்கும் மனிதர்களுக்கும் அது உவப்பானதே!'' என்றார்.

இதைக் கேட்ட இளைஞன் 'குருவின்றித் தான் கற்ற சாஸ்திரங்கள், குருடன் முன் நிற்கும் கொக்குக்குச் சமம்' என வருந்தி, அப்பெரியவரின் காலில் விழுந்து வணங்கிவிட்டு, பழையபடி குரு குலவாசம் செய்ய நடந்தான்.



மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை— இன்க்ரிமின்*



பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே— முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும் நேரம்—சிட்டுப்போல் பறக்க சிறகு முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான பருவத்திலே உங்கள் கண்மணிக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்களோடு, உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.


டிராப்ஸ்—2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப்—14 வயது வரையில்

இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்



Sista's INC-364 C/75 Tam

—கௌசிகன்



மாயக் கதிரும் மலேரியா ஒழிப்பும்



மோட்டார் காரின் 'ஹெட்லைட்' இருளை விலக்கும் ஒளிக் கதிர்களை வெளியிடுவது உனக்குத் தெரியும். இக்கதிர் இருளை விரட்டி வண்டியோட்டிக்குத்- தான் போக வேண்டிய பாதையை உணர்த்துகிறது. சூரியனிடமிருந்து— வரும் ஒளி இரவை விரட்டிப் பகலை உண்டாக்குகிறது. உலகம் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுகிறதென்று உனக்குத் தெரியும். இப்படிச் சுழலும் போது சூரியனை நோக்கியுள்ள பூமியின் பாகம் மறுபக்கத்துக்குப் போகும் போது சூரிய ஒளி விழாத பகுதியில் இரவு ஏற்படுகிறது. சூரிய ஒளியினால் பூமியைத் துளைத்துக் கொண்டு மறுபக்கம் போக முடிவதில்லை. பூமியைப்போலவே எல்லா இடப் பொருள்களிலுமே ஒளி ஊடுருவாது என்று சொல்ல முடியாது. நம் ஜன்னல்களிலுள்ள கண்ணாடி வழியாகச் சூரிய ஒளி ஊடுருவுகிறது.

மரம், நம் உடல், துணி இவைகளின் வழியாக ஒளி ஊடுருவுவதில்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் இவைகளிடையேயும் ஊடுருவக் கூடிய — ஒளிகள் இருக்கின்றன என்ற உண்மை உனக்குத் தெரியாது. உனக்கு மட்டுமா? உலகத்துக்கே என்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த உண்மை தெரிந்திருக்கவில்லை.

அம்மாதிரி ஒரு மாயக்கதிர் வீச்சு இருப்பதினால்தான் இன்று நம் உடலில் ஏற்படும் எலும்பு முறிவுகளையும், சுவாச கோசத்தைத் தாக்கும் காச நோய்க் கோளாறுகளையும், இதயத்திலோ, வயிற்றிலோ, மூளையிலோ ஏற்படும் நோய்களை, அது எந்த அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உடலை அறுத்துப் பார்க்காமலேயே கண்டு கொள்வதற்கு ஒருவகை ஒளி பயன்படுகிறது. இதற்குப் 'பெயர் தெரியாத ஒளிக் கற்றைகள்' என்று பெயர். 'எக்ஸ்ரே' என்று கூறினால் உங்களுக்குப் புரிந்து விடும். மருத்துவத்- துறைக்கு விஞ்ஞானம் அளித்த ஓர் வரப்பிரசாதம் இந்த **'எக்ஸ்ரே.'**

இதைக் கண்டு பிடித்தது யார்? எப்படிக் கண்டு பிடித்தார்?

வில்ஹெல்ம் ரோண்ட்ஜென் என்பவர் *(Wilhelm Rontgen)* பௌதிகப் பேராசிரியர். பவேரியா நாட்டைச் சேர்ந்தவர். (பவேரியா ஜெர்மனியைச் சேர்ந்தது) எக்ஸ்ரேயைக் கண்டு பிடித்தவர் இவர்தான். இதை இவர் காணப் பெரிய ஆராய்ச்சிகள் எதும் செய்யவில்லை. அப்படியானால்?



வேறு எதற்காகவோ எதையோ ஆராய்ந்துக் கொண்டிருக்கும் போது தற்செயலாக இந்த அதிசயக் கதிர் தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டது. எதிர்பாராத விதமாகக் கிடைத்த அதிசய ஒளி இது. ரோண்ட்ஜென், பிரிட்டிஷ் விஞ்ஞானியான குருக்ஸ் என்பவர் உருவாக்கிய ஒரு வித மின்சாரக் குழாயில் சோதனைகள் நிகழ்த்திக் கொண்டிருந்தார். குருக் மின்குழாயைக் கனமான கருப்புக் காகிதத்தினால் — கொஞ்சமும் ஒளி வெளியே வரா வண்ணம் நன்கு மூடி விட்டு அதில் மின்சாரத்தைப் பாய்ச்சினார். அறையில் தார் போன்ற இருள் கப்பிக் கிடந்தது. ஆனால் குருக்ஸ் குழாய்க்குச் சற்றுத் தொலைவில் ஆராய்ச்சிக்காக இருந்த சில ஸ்படிகங்கள் ஒளியைப் பிரதிபலித்துத் தகதகத்துக் கொண்டிருந்தன. ரோண்ட்ஜெனுக்கு வியப்பான வியப்பு. அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அந்த ஸ்படிகங்கள் சிந்திய ஒளி சாதாரணமானதாகவுமில்லை. நல்ல பச்சை நிறமான ஒளி. அத்தகைய ஒளி எங்கிருந்து வருகிறது?

அந்த ஆராய்ச்சிச் சாலையில் க்ருக்ஸ் குழாயிலிருந்துதான் ஒளி வந்து கொண்டிருந்தது. வேறு ஒளிக்கு அங்கு மார்க்கமே இல்லை. ஆனால் அவரோ அந்தக் க்ருக்ஸ் குழாயை கருப்புக் காகிதத்தினால் ஒளி வெளிப்படாதபடி நன்கு மூடி இருந்தார். ரோண்ட் ஜென் க்ருக்ஸ் குழாய் அருகே சென்று அதன் விளக்கை ஆஃப் செய்து அணைத்தார். உடனே கனன்று கொண்டிருந்த பச்சை ஒளி பட்டென்று மறைந்தது. மறுபடியும் குழாயில் மின்சாரம் பாயச் செய்தபோது அதிசயப் பச்சை ஒளி திரும்பவும் தோன்றியது.

திகைப்பும் வியப்பும் அடைந்த ரோண்ட்ஜென் குழாய்க்கும், ஸ்படிகங்களுக்குமிடையே தமது கையைக் கொண்டு போனார். கண்ணுக்குப் புலப்படாத மாய ஒளி—கருப்புக் காகிதத்தின் வழியாகப் புகுந்து வெளிப்பட்ட அந்த அதிசய—ஒளி கைகளின் ஊடாகப் புகுந்து அவரது கையிலுள்ள எலும்புகளின் வடிவத்தை ஸ்படிகங்களின் அருகிலிருந்த ஒரு அட்டை மீது நிழலாக விழச் செய்தது.

கருப்புக் காகிதத்தின் ஊடாகப் புகுந்து வெளிப்படும் சக்தி படைத்த கண்ணுக்குப் புலனாகாத ஏதோ ஒரு வகை ஒளிக் கற்றைகள்தான் ஸ்படிகங்களை ஒளி உமிழச் செய்திருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தார். உடலின் சதைகளுக்குள் புகுந்து செல்லக்கூடிய ஒரு புதிய ஒளிக்கீற்று இருப்பதை அறிந்தார் ரோண்ட்ஜென். ஆனால்



அதன் பெயர் என்ன என்று அவரால் கூற முடியவில்லை. ஆகவே அதற்கு—'எக்ஸ்ரே' (X-Ray) என்று பெயரிட்டார்.

ரோண்ட்ஜென் புதிய ஒளிக்கீற்றை மேலும் ஆராய்ந்தார். தன்னுடைய மணிபர்சில் நாணயங்கள், சாவி ஆகியவைகளைப் போட்டு, இந்த ஒளிக்கும் 'போட்டோ' பதிவு செய்யும் ரசாயனத் தகட்டுக்குமிடையே அதை வைத்தார். தோலினாலான பர்சின் மூலம் ஒளி ஊடுருவியது. ஆனால் சாவி, நாணயங்களில் அது பாயவில்லை. பர்சினுள்ளே இருக்கும் பொருள்கள் வரை படமாக புகைப்படத் தகட்டில் பதிவாகியது.

தமது கண்டு பிடிப்பை விஞ்ஞான உலகுக்கு அறிவித்தார் ரோண்ட்ஜென். விஞ்ஞானிகள் புதிய கண்டு பிடிப்பை மொய்த்துக் கொண்டார்கள். இதுவரை காண முடியாத உடலின் உள் உறுப்புக்களின் படங்களைக் காண முடிந்ததில் டாக்டர்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சி உண்டாயிற்று. எத்தனையோ சிக்கலான எலும்பு முறிவுகளுக்கும் நோய்களுக்கும் எப்படிச் சிகிச்சை செய்வது என்று தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு வழிகாட்டியாக வந்தது-எக்ஸ்ரே ஒளிக்கதிர்கள்.


தற்செயலாகக் கண்டு பிடித்த எக்ஸ்ரே கதிர்களினால் மருத்துவ உலகில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டது. இந்தக் கண்டு பிடிப்புக்காக ரோண்ட்ஜெனுக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டது. இன்று மருத்துவச் சாலைகளில் இன்றியமையாததோர் அங்கமாக விளங்குகிறது எக்ஸ்ரே. எத்தனையோ வகைகளில் வைத்தியத் துறையில் எக்ஸ்ரே பயன்படுகிறது. மனித உடலின் உள் உறுப்புக்களை ஊனக் கண்களால் பார்ப்பதற்கு வகைசெய்துள்ள எக்ஸ்ரே

மருத்துவ உலகுக்குக் ரோண்ட் ஜென் அளித்த வரப் பிரசாதம்தானே ?

1881ல் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கட்டடக் கலை நிபுணரான பெர்டினண்ட் டி லெஸெப் பனாமா கால்வாய் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஆயிரம் பேர் கால்வாய் வெட்டுவதில் ஈடுபட்டிருந்தனர். ஒரே வருஷத்தில் அத்தனை பேரும் இறந்தனர். அவர்கள் இடத்தை இட்டு நிரப்ப வந்த மற்றத் தொழிலாளர்களும் மரணத்தைத் தழுவினார்கள். மலேரியாவினாலும் மஞ்சள் நோயினாலும் தாக்கப்பட்ட லெஸெப் தமது பணியைக் கைவிட்டார்.

அப்போது இத்தகைய நோய்களைக் கொசுக்கள்தான் பரவச் செய்கின்றன என்ற உண்மை தெரியாதிருந்தது. சரித்திர காலத்தின் ஆரம்பத்திலிருந்தே மலேரியா நோயைப் பற்றி மனிதனுக்குத் தெரிந்திருந்தது. ஹிப்போகிரேட் இதைப் பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். பிரிட்டனில் இதை அகு (ague) என்ற பெயரில் அப்போது அழைத்தார்கள்.

மற்ற நோய்களைவிட உஷ்ணப் பிரதேசத்தில் மலேரியா அதிக உயிர்களைக் கொள்ளை கொண்டு வந்தது. இந்த நோய் ஒரு மனிதனைத் தாக்கி அதில் அவன் பிழைத்தானானால் அது மறுபடியும் மறுபடியும் அவனைத் தாக்கலாயிற்று. இது எப்படி ஏற்படுகிறது? ஒருவரிடமிருந்து மற்றவருக்கு எப்படித் தொத்திக் கொள்ளுகிறது என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை.



சதுப்பு நிலங்களின் அருகில் மலேரியா நோய் அதிகமாக இருந்தது. அந்த நிலங்களிலிருந்து வெளிப்படும் ஒருவகை வாயுவே இந்நோய்க்குக் காரணம் என்று நம்பினார்கள். ஆகவேதான் இதற்கு மலேரியா என்ற பெயரும் ஏற்பட்டது. இத்தாலி மொழியில் கெட்ட காற்று என்பதை மலேரியா என்பார்கள். அதிலிருந்துதான் இந்நோய்க்கு இப்பெயர் பிறந்தது.

மலேரியா நோய்க்குக் காரணம் அறியப்படுவதற்கு முன்பே அதைக் குணப்படுத்தும் சிறந்த மருந்தைத் தென் அமெரிக்க வாசிகள் அறிந்திருந்தார்கள். சின்கோனா என்பது ஒரு மரம். அதன் பட்டையி லிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு கஷாயத்தை இந்த நோயாளிக்குக் கொடுத்துக் குணப்படுத்தினார்கள். இதுதான் க்வினைன் எனப்படும் மருந்து. 1930 வரை மலேரியா நோய்க்கு க்வினைன்தான் மருந்தாக இருந்தது.

1880ல் பிரான்ஸைச் சேர்ந்த ராணுவ டாக்டரான மேஜர் லாவரன் என்பவர் ஒரு முக்கியமான விஷயத்தைக் கண்டு பிடித்தார். 'மலேரியா நோய் ஒட்டுண்ணிகளால் ஏற்படுகின்றன. உடலில் புகும் இந்த ஒட்டுண்ணிகள் ரத்தத்தில் கலந்து ரத்த அணுக்களை அழிக்கின்றன. இந்த ஒட்டுண்ணிகளைக் கொல்லும் சக்தி க்வினைன் மருந்துக்கு இருப்பதினால் மலேரியாக் காய்ச்சல் நீங்குகிறது. இந்த ஒட்டுண்ணிகள் (பாரஸைட்) ரத்தத்தினுள் எப்படிப் போகின்றன என்பதைக் கண்டு பிடிப்பதுதான் பிரச்னை.'

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த டாக்டர் பாட்ரிக் மான்சன் என்பவர் சீனாவில் நெடுங்காலம் ஆராய்ச்சி செய்தவர். சில நோய்களைக் கொசுக்கள் பரப்புகின்றன என்ற முடிவுக்கு வந்திருந்தார். மலேரியாவையும் கொசுக்களே பரப்பக் கூடும் என்று நம்பினார் பாட்ரிக். இந்தியாவில் அப்போது ராணுவ சர்ஜனாக இருந்த ரொனால்டு ராஸ் என்பவரிடம் பாட்ரிக் மான்சன் தமது கருத்தை வெளியிட்டார். ராஸ் இதை உண்மை என்று நிரூபித்தார். எப்படி ?

கொசுக்களில் நூற்றுக் கணக்கான வகைகள் இருந்தன. இவைகளில் மலேரியா ஒட்டுண்ணியைச் சுமந்து செல்லும் கொசு எது என்பதைக் கண்டாக வேண்டும். ஆராய்ச்சி செய்ய ஏராளமான கொசுக்களைச் சேகரிக்கச் செய்தார்.

ராஸ் ஒவ்வொரு கொசுவையும் மிக நுணுக்கமாக வெட்டிச் சோதனை செய்தார் சூட்சும தரிசினியின் மூலம். கொசுவைப் பிடித்து அதை வெட்டி ஆராய்வதென்பது சாதாரணச் செயலா? ஆனால் மனித இனத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடையவர்களுக்கு இவை யெல்லாம் சர்வ சாதாரணம்.

பல மாதங்கள் செய்த ஆராய்ச்சி எவ்விதப் பலனையும் தரவில்லை. ஒரு நாள் 1897ல் பழுப்பு நிற இறக்கையோடு கூடிய சில கொசுக்கள் ஆராய்ச்சிக்கு வந்தன. அம்மாதிரிக் கொசுக்களை அவர் அதுவரை பார்த்ததே இல்லை. மலேரியா நோயாளியின் உடலில் அக்கொசுக்களை விட்டுக் கடிக்கச் செய்தார் ராஸ். பிறகு அந்தக் கொசுக்களை அறுத்துப் பார்க்கும் கடினமான ஆராய்ச்சியில் இறங்கினார். ஆரம்பத்தில் சில கொசுக்களில் வழக்கப்படி விசேஷமாக ஏதுமில்லை. கடைசியில் ராஸ் ஒரு கொசுவின் உடலில் ஆச்சரியப்படத் தக்க உண்மையைக் கண்டார். அந்தக் குறிப்

பிட்ட கொசுவின் வயிற்றில் மலேரியா ஒட்டுண்ணிக் கிருமிகள் பல்கிப் பெருகி வளர்ந்திருந்தன. ஆகவே அனோஃபலஸ் (*Anopheles*) என்ற இவ்வகைக் கொசுக்கள்தான் மலேரியா நோயைச் சுமந்து சென்று பரப்புகின்றன என்ற உண்மையை அறிந்தார் ராஸ். ஆனால் மனித உடலில் இந்த நோயை இவை எப்படி ஏற்றுமதி செய்கின்றன?


ராஸ் தமது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். பறவைகளுக்கு வரும் மலேரியா நோயை அதைக் கடிக்கும் கொசுக்கள் அதன் உடலிலிருந்து ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு இன்னொரு பறவையின் உடலில் ரத்தம் குடிக்கப் போகும்போது; நோய் ஒட்டுண்ணிகள் அந்தப் பறவையின் உடலில் புகுந்து பரவுகின்றன என்ற உண்மையை அறிந்தார். மனிதர்களிடையேயும் இதே முறையில்தான் இந்நோய் பரவலாம் என்ற முடிவுக்கு வந்தார் ராஸ். 1898ல் இத்தாலிய விஞ்ஞானிகள் ராஸின் முடிவை உறுதியாக்கினார்கள்.

மலேரியா நோய்பரவும் விதத்தின் கதை பூர்த்தியாகிறது. மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட மனிதனை குறிப்பிட்ட கொசு கடித்து ரத்தத்தை உறிஞ்சுகிறது. ரத்தத்தோடு நோய் ஒட்டுண்ணிகள் அதன் வயிற்றில் போய் வளர்ந்து பெருகுகின்றன. நோயற்ற மற்றொரு மனிதனை அதே கொசு கடிக்கும்போது நோய் ஒட்டுண்ணிகள் அவன் உடலுக்குள் புகுந்து அவனுக்கும் மலேரியா நோய் ஏற்படுகிறது. இப்படியே இந்நோய் பரவுகிறது.

இந்நோயைத் தடுப்பது எப்படி? கொசு இல்லாவிடில் இந்நோயுமில்லை. ஆகவே கொசுக்களை ஒழித்தால் இந்நோயையும் ஒழித்துவிடலாம். ஓட்டமில்லாமல் தேங்கியுள்ள குளம், குட்டை, சதுப்பு நிலங்களே கொசு பல்கிப் பெருகுவதற்கான இடங்கள். ஆகவே இம்மாதிரியான தேக்கங்களை வடிக்கச் செய்தால், காய வைத்தால் கொசுக்களுக்கு இருப்பிடமில்லாமல் செய்து விடலாம். நீர்த் தேக்கங்களின் மீதாக எண்ணைகளைத் தெளிப்பதினால் கொசுக்களின் லார்வா என்னும் கூட்டுப் புழுக்களைக் கொன்றுவிடலாம். அவை பல்கிப் பெருகமாட்டா. இப்படியே ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. கொசுக்களை ஒழிப்பதன் மூலம் மனித இனத்துக்கு மகத்தான விரோதியாக இருந்த மலேரியா நோயை உலகின் பெரும் பகுதிகளில் அழித்து வெற்றி கண்டது மருத்துவ உலகம்.



தெரியுமா?



1884. முதலாம் எமானுவேல் மன்னரால் இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் காண்பதற்காக அனுப்பப்பட்ட போர்த்துகீஸிய மாலுமியின் பெயர் தெரியுமா?

1885. உலகின் மிகப் பெரிய சமுத்திரம் *(Ocean)* எது?

1886. இரண்டாவது உலக யுத்தத்தில் ஐரோப்பாவில் அமெரிக்க ராணுவத்தின் தளபதியாகப் பணியாற்றிய ஒருவர் பிற்காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியானர். அவர் யார்?

1887. ஏழு வார யுத்தம் — என்பது ஐரோப்பிய சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. இது எந்த இரு தேசங்களுக்கிடையே நடந்த போர்?

1888. முதல் மகா யுத்தத்தில் மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது மான்ஸ் *(Mons)* என்ற இடத்தில்தான். இந்த மான்ஸ் எங்குள்ளது?

1889. ஒரு புகழ் பெற்ற பிரிட்டிஷ் தளபதி 1916ல் ரஷ்யாவிற்குக் கப்பலில் போய்க் கொண்டிருக்கும்போது கடல் கண்ணியில் கப்பல் மோதியதனுல் கப்பல் உடைந்து அவர் இறந்தார். அவர் பெயர் தெரியுமா?

1890. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் 1338-ல் ஒரு போர் மூண்டது. இந்தப் போர் சரித்திரப் புகழ் பெற்றது. இதன் பெயர் என்ன?

1891. கெட்டிஸ் பர்க் போர் எந்த நாட்டில் நடந்தது?

1892. நெப்போலியன் தோற்று நாடு கடத்தப்படுவதற்குக் காரணமாக அமைந்த போரின் பெயர் என்ன?

1893. வின்ஸ்டன் சர்ச்சில் இளமையில் ஒரு யுத்தத்தில் பத்திரிகை நிருபராக வேலை பார்த்த போது கைதானுர். எந்த நாட்டில், எந்தப் போரில்?

1894. மிகப் புகழ் பெற்ற போர் வீரரும் அரசருமான ஒருவர் புஸஃபெலஸ் என்ற குதிரை மீதேறித் தான் தம் படைகளை நடத்திச் சென்ருர். அவர் யார் தெரியுமா?

1895. கிரிமியப் போரில் பிரிட்டனின் எதிரி நாடு எது?

1896. பாரதத்தில் 1526-ல் டெல்லிக்கு வடக்கே ஓர் இடத்தில் புகழ் பெற்ற சண்டை ஒன்று நடந்தது. இதனுல் ஒரு புதிய ஆட்சி பாரதத்தில் தோன்றியது. சண்டை நடந்த இடத்தின் பெயர் ஆட்சியாளர்களின் பெயர் என்ன?

1897. கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வர்த்தக அனுமதி வழங்கப்பட்ட ஆண்டு எது? யாரால்?

1898. போர்த்துக்கீசியர்களுக்கு—1561-ல் பாரதத்தில் சொந்தமாக இருந்த இடங்கள் எவை?

1899. விஜயநகரப் பேரரசு வீழ்ந்த பிறகு அதன் பகுதிகளை யார் யாரால் எப்படிப் பங்கு போட்டுக் கொள்ளப் பட்டது?

1900. வந்தவாசிப் போர் நிகழ்ந்தது எப்போது? அதில் தோற்றது யார்?


1901. பாலலைகா என்பது என்ன?

1902. பாடவி வளைகுடா எங்குள்ளது?

1903. டிரிஸ்டான் டி குன்ஹா என்ற தீவு எந்த சமுத்திரத்தில் உள்ளது?

1904. வடக்கு வியட்நாமின் தலைநகர் எது என்று சொல்லுவாயா?

தெரியுமே!



1884. வாஸ்கோட காமா. 1885. பசிபிக் மகா சமுத்திரம் 63,800,000 சதுர மைல்கள் வியாபித்துள்ளது. 1886. ஐஸன்ஹோவர். 1887. பிரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும். 1888. பெல்ஜியத்தில். 1889. ஜெனரல் லார்டு கிச்னர். 1890. நூறாண்டுப் போர் (Hundred Years War) 1891. ஐக்கிய அமெரிக்காவில். 1892. வாட்டர்லூப் போர். 1893. தென் அமெரிக்காவில். போயர்களின் போரில். 1894. மகா அலெக்ஸாண்டர். 1895. ரஷ்யா. 1896. பானிபட் சண்டை. இதன் பிறகு தோன்றியது மொகலாயர் ஆட்சி. 1897. ஜஹாங்கீர். 1615-18வரை இந்தியாவிலிருந்த சர் தாமஸ் ரோவிற்கு வர்த்தக உரிமையை வழங்கினுர். 1898. கோவா, சால், பம்பாய், பாஸின், டையூ, டாமன் ஆகியவை. 1899. சில பகுதிகளை பீஜப்பூரும் கோல்கொண்டாவும் தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டன. மற்றவைகளைப் பாளையக்காரர்கள் ஆங்காங்கே தங்களதாக்கிக் கொண்டார்கள். இதில் ஒருவர் சந்திரகிரியையும் மைசூரை உடையார்களும் செஞ்சி, தஞ்சை, இக்கேரி, மதுரை ஆகியவற்றை நாயக்கர்களும் பங்கிட்டுக் கொண்டு ஆட்சி செலுத்தினர். 1900. போர் நிகழ்ந்தது 1760ல். தோற்றது பிரஞ்சுக்காரர்கள். 1901. கிடார் வாத்தியத்தைப் போல், ஆனல் முக்கோண வடிவில் 2, 3, அல்லது 4 தந்திகளைக் கொண்டதோர் இசைக் கருவி. 1902. ஆஸ்திரேலியாவில். 1903. அட்லாண்டிக் கடலில். 1904. ஹனுய்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கலிலி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்